திராவிடநாடு

டில்லியின்
அநீதியை
எதிர்ப்போம்!





சென்னை ★ பிப்ரவரி 20

மேலே :—மவுண்ட் ரோடு, ரவுண்ட்டாணா! எப்போதும் மக்கள் திரள் குவிந்திருக்கும் இடம். எப்படியிருக்கிறது கண்டீர்களா!

கீழே :—சைனா பஜார் என்றாலே, வியாபாரச் செழிப்புள்ள இடம் என்று அறிவர் அனைவரும்! தமிழரின் எழுச்சி முரசு கேட்டு, தமது கடமைகளைச் செய்தனர், கடைக்காரர்கள்.



தண்டோரா சர்க்கார்!

(1)

தம்பி,

கண்ட காட்சியோ பெரியதோர் நம்பிக்கையை அளித்தது — கடலலை ஒலியையும் அடக்கிடும் வகையில் முழக்கம், காண்போரின் கோழைத்தனத்தைக் கல்லி எறிந்திடும் விதமான வீரத் தோற்றம், காரியமாற்றும் திறன் படைத்த காளையர் இலட்சக் கணக்கில் உள்ளனர் என்ற பெருண்மையை எடுத்துக் காட்டிடும் எழுச்சி, எல்லாம் கண்டேன், வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் பிறந்தோமே, வீரர் குறைந்து, வீணர் மிகுந்துள்ள நாட்களிலே வாழ்கின்றோமே, உரிமை உணர்வற்று, உண்போம் உறங்குவோம், இடையில் உல்லாசம் தேடுவோம், என்றுள்ளனரே மக்கள், என் செய்வோம், மரபினை மறந்து, தாயகத்தின்மீது தளை பல பூட்டிடத் தருக்கர் துணிந்திடுவது தெரிந்தும் சிறுவிரலையும் அசைக்காது உள்ளரே பெரும்பாலோர், என் செய்வது என்று திகைத்துக்கிடந்த என்னை, அன்று நான் கண்ட காட்சி, தட்டி எழுப்பிற்று. ஏடா! ஏதேதோ எண்ணி ஏங்கிக் கிடந்திடும் அசடனே! கண்டாயா, இப்பெரும் படையினை! இவர்தம் உறுதியினை அறிவாயோ! எதையும் தாங்கிக் கொள்ளும் இதயம் கொண்டோர்! எந்தையர் நாட்டின் உரிமை காத்திட இன்னுயிரையும் ஈந்திடும் உரம் கொண்டோர்! துரைத்தனத்தார் அவிழ்த்துவிடும் அடக்குமுறை கண்டு அஞ்சுபவர் இவர் அல்ல! துப்பாக்கி உறுமட்டும், தூற்றல் துளைக்கட்டும், தூய உள்ளம் படைத்த இத்தமிழப் பெருங்குடி மக்கள், துளியும் அஞ்சப்போவதில்லை! நீ ஏதேதோ பேசுகிறாய், பலப்பல எழுதுகிறாய், இதோ இவர்கள் நாளையத்தினம் 'வீரகாவியம்' தீட்டிக் காட்டப் போகிறார்கள்! கலிங்கமும் கடாரமும் வென்றவர் அல்லவா, தமிழர்! அவர் வழி வந்தோர் காட்டாட்சி நீட்டிடும் தடியடி துப்பாக்கிக்கா அஞ்சுவர்! வீண் பயம் உனக்கு, காரணமற்ற சந்தேகம்! அதோ அந்தக் கண்ணொளி தந்திடும் கருத்துரை அறிகிறாயா? இவர்கள் இத்துணை இலட்சம், திரண்டிருக்கக் கண்டும், என்ன ஆகுமோ, எது நேரிடுமோ என்று கலங்கிக் கிடக்கிறாயே, சந்தனம் இருக்கும்போது 'மணம்' கிடைக்குமோ இல்லையோ என்றும் கலங்கிடப் போமோ! — என்றெல்லாம், எண்ணிடச் செய்ததோர் எழில் நிறை காட்சியைக் கண்டேன், உள்ளம் உணர்ச்சியின் ஊற்றாயிற்று, களிப்பிலே மிதந்தேன், கற்பனைச் சிறகடித்து எண்ண வானில் பறந்தேன், இன்பம், இன்பம் என்னென்பேன் நான் கொண்ட இன்ப எண்ணங்களை.

எனினும், மீண்டும் மனம் குழப்பத்துக்கு இடமளித்தது.

கடற்கரையில், கூடினர் நான்கு இலட்சம் மக்கள்!

தலைவர்களின் 'அழைப்பு' கேட்டு திரண்டெழுந்து வந்தனர்!

பண்டைப் பெருநாட்களிலே பாராண்ட மன்னர்கள், தமிழகத்தின் மானம் காத்திட, மாற்றானைத் தாக்கிடக் கிளம்பிய காலை, நம் மூதாதையர் இங்ஙனம்தான் கூடியிருப்பர், கோட்டைப் பெருவெளியில்! அன்று அவரிடம் வடித்தெடுத்த வாளும் வேலும் இருந்தன! களிறுகள் ஒப்பமிடுவது போல் பிளிறிக்கொண்டிருக்க, காற்றையும் வெல்ல வல்லோம் என்று பரிப்படை கனைத்திட, இவற்றினைக் கண்டு, வேட்டை! வேட்டை! என்று வீரர் கூட்டம் துடித்தெழுந்தது!

ஆனால், அது, அன்று! இன்று? இனமும் இயல்பும் கெட்டு, இழிவும் பழியும் படர்ந்திட, பான்மைபட்டுக் கிடக்கும் நாளன்றோ!

தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கோர் பண்பு உண்டு' — என்று நாமக்கல் கவிஞரும், 'தேசியத்தையும்' மறந்து பாடிட வேண்டிய விதமாக அல்லவா, தமிழர் என்ற இன உணர்வு குன்றிக்கிடக்கிறது. இதனை அறிந்தல்லவா, குடிலர்கள் கோலோச்சத் துணிந்தனர், குணக்கேடர்கள் ஆசான்களாக முன்வந்தனர்! இந்நாளில், எழுச்சி ஏற்படுவதெங்ஙனம் இயலும்! ஏன்? என்று கேட்கும் திறனற்று, அநீதியை எதிர்த்து நிற்கும் வீரமற்று, பிறந்து தொலைந்தோம், இறந்துபடும் வரையில் வாழ்ந்து தொலைப்போம், கைகட்டி வாய்பொத்தியேனும், காடு கரம்பு உழுது கிடந்தேனும், பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பிச்சை எடுத்தேனும், இச்சகம் பேசிக்கிடந்தேனும், பிழைத்துக்கிடந்தால் போதும் என்று எண்ணிடும் பேதையரானோமே, அஃது அறிந்தனரே, மூதாதையர் காலத்தில் முழங்காற்படியிட்டுக்கிடந்த இனத்தோரெல்லாம் இன்று, முடுக்கும் மிடுக்கும் காட்டுகின்றனர், — இந்நிலையில், இழிவினை ஒழித்திட அறப்

போர்ப்படை திரளட்டும் என்று, நா உலர, நெஞ்சம் உலரக் கூவித்தான் பயனென்ன, என்று மனம் குமுறும் நிலையில் இருந்திடுபவனல்லவா, நான்! பிப்ரவரி 19, மாலை, கடற்கரையில் கூடிக் கடமை உணர்ச்சியை இழந்தோமில்லை, காரியமாற்றிடும் திறனை இழந்தோமில்லை, வேற்றார் மாற்றாராயினர் எனப தறிந்தால் அவர்தம் கொட்டம் நொருக்குவோம், நமக்கென்றோர் கொற்றம் அமைப்போம், கோழை என்று எண்ணாதீர்! அண்ணா' கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியும் எம்மால்! குழப்பமடையாதீர்! கோல் கொண்டோன், உருட்டி மிரட்டட்டும், கலங்கப் போவதில்லை! விரட்டித் தாக்கட்டும், கீழே வீழ்ந்துபடும வரையில் வீரப் போரிடுவோம்! எம்மைச் சந்தேகிக்க வேண்டாம், உடன் பிறந்தாரிடம் நம்பிக்கை கொள்ளாமல், வேறு அதனை எங்ஙனம் பெறுவீர், எவரிடம பெறுவீர், கலப்பை தூக்கிய கரங்களெல்லாம், அதற்கான காலகட்டம் வந்த போது, வாளேந்திக் களம் சென்ற காதையினை மறந்தனையோ! ஏரடிக்கும் சிறுகோலும், எருதுகளும் தான் இவன் அறிவான், இவனுக்கு வாளேந்த, ஈட்டி எறிய, எங்ஙனம் இயலும் என்று எண்ணினரோ நமது முன்னோர்! மடை கட்டி அறிவானே தவிர படையில் பணியாற்றத் தெரியுமோ இவனுக்கு! மேடு வெட்டிப பள்ளம் நிரப்புவான், வாய்க்கால் வெட்டுவான், வளமளிக்க நீர்பாய்ச்சுவான், அறுத்தெடுப்பான், புடைத்து எடுப்பான், குவிப்பான களிப்புறுவான, இவ்வளவுதான் இவனறிவானேயன்றி, பாய்ந்து தாக்கவும், பக்கவாட்டத்தில் செல்லவும், கோட்டைச் சுவர் ஏறவும கொத்தளங்களைத் தூளாக்கவும் இவனுக்கு என்ன தெரியும், என்று சந்தேகித்தனரோ முன்னையோர்! இல்லை! இல்லை! உழவனெனினும, களம் அமைத்துக்கொண்டனரோ பணியாற்றுகிறான! எனவே காலம் கட்டளையிட்டதும், கரம் வாளாகும், உழவன் உயர்தரமான போர் வீரனாவான்! என்றனரோ எண்ணினர். அஃதேபோல நாங்கள், கடைவைத்துப் பிழைக்கிறோம் கட்டைவெட்டி வாழ்கிறோம், கல்பிளந்தோ மண் சுமந்தோ கால் வயிறாறுக் கஞ்சிக்கு வழிதேடிக் கொள்கிறோம், தொழில்கள் ஆயிரம் புரிகிறோம், துயரமோ மலையத்தனை காண்கிறோம், ஆலைகளில் கரும்பாகிப் பிழியப்படுகிறோம், ஆவிசோரப் பாடுபடுகிறோம், கட்டுமரம் ஏறிச்சென்று கடலில் பிழைப்புத் தேடுகிறோம், ஆமாம், அரைவயிற்றுக்காக ஆலாய்ப் பறக்கிறோம், அது உண்மைதான்; எனினும், ஆன்றோரும் சான்றோரும் வாழ்ந்த நந்தம் நாட்டுக்கு ஓர் ஆபத்துச் சூழ்ந்திடுகிறது என்று அறியும்போது, நாங்கள அஞ்சிடும் போககிலா இருந்திடுவோம், நம்மால் ஆகுமா என்று பெருமூச்சு விட்டபடியா முடங்கிக் கிடப்போம், வாள் கிடைக்காது போயினும் எதிரியின் வாளை ஒடித்திட இக்கரங்களைப் பயன்படுத்துவோம் மார்பிலே, மாற்றார் வீசும் கணைகளைத் தாங்கிக்கொள்வோம், களம் எது காட்டிடு, காலம் குறித்திடு, செயல்முறையினைச் செப்பிடு, செய்து முடித்திடுவோம், இல்லையேல் செத்து ஒழிந்திடுவோம்! **செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ?** என்று பாடியவர் நம்முடைய பாரதிதாசனல்லவா! அந்தப் புரட்சிக் கவிஞன் கிளப்பிய பொறிகளெல்லாம் எங்கே போய் விட்டன? இதோ, எமது கண்ணொளி காண்பாய்! இங்கே வந்தனரே, அவை அத்தனையும் குடி ஏறிவிட்டன, என்றெல்லாம் எனக்கு எடுத்துரைப்பது போலிருந்தது, பிப்ரவரி 19ல் நான் சென்னைக் கடற்கரையில் கண்ட காட்சி.

தம்பி, நான் மந்திரியல்லவே அதனால் மக்கள் திரண்டெழுந்திருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன. எழுச்சியூட்டும் பெருங்கூட்டம பலவற்றிலே கலந்துகொண்டிருக்கிறேன —எனினும் எனக்கு ஒருகணம் திகைப்பே ஏற்பட்டுவிட்டது, அன்றைய கூட்டத்தின் அளவையும் அங்கு காணப்பட்ட எழுச்சியின் வகையையும் கண்டு!

மக்களோ, ஒரே மேடையில், ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கிடக்கும பல்வேறு கட்சியினர் அமர்ந்திருப்பது கண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

காலை மலர்ந்ததும், நாடெங்கும் கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடைபெறவேண்டும.

அது எந்த அளவு வெற்றிபெறுகிறதோ இல்லையோ, கலாம் ஒரு துளியும் நடைபெறக்கூடாது.

ம. பொ. சி; பி. டி. ராஜன் பாராட்டிப் புகழத்தக்கவிதமாகப் பேசுகிறார், 'எத்தனை சதவிகிதம் கடை அடைப்பு வெற்றிபெற்றது என்பதைவிட, எத்தனை சதவிகிதம் அமைதி நிலவுகிறது என்பதுதான் முக்கியம், என்று.

நான், பன்னிப் பன்னி. அமைதி, அமைதி! அடித்தால் பொறுத்துக் கொள்ளவேண்டும்; தாக்கினால் தாங்கிக்கொள்ளவேண்டும்: தூற்றுவர், கோபம் கொள்ளக் கூடாது; இழித்தும் பழித்தும் பேசுவர், ஏளனம செய்வர், அது கேட்டு மன எரிச்சலடையக்கூடாது என்கிறேன்.

நமது முறையில் பலாத்காரம் தலைகாட்டக்கூடாது, யாரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது— கடை அடைப்பிலும வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து ஈடுபடவேண்டும், யாரையும் நாம் பலவந்தபபடுத்தக் கூடாது, என்று தமக்கே உரித்தான பண்புடன் பேசுகிறார், பி. டி. ராஜன்.

மக்களோ, அப்போதே நகரெங்கும் குழுமிக் கிடக்கும் கவசத் தொப்பி தரித்த போலீசைக் காண்கிறார்கள்; அவர்களின் முகம் கடுகடுத்து இருப்பதும் தெரிகிறது. இவர்கள் என்னென்ன 'இமசை'கள் தருவார்களோ என்றும் எண்ணுகிறார்கள். இங்கோ தலைவர்கள, காந்தியார் பார்த்து மெச்சத்தக்க வகையில், 'சாந்தோபதேசம்' செய்கிறார்கள்—போலீஸ் முகாமிலோ, துப்பாக்கிகளுக்குத் தோட்டாக்களைப பொருத்திக்கொண்டும், தடிகளுக்குப போடப்பட்டுள்ள 'பூண்கள்' சரியாகப் பொருந்தியுள்ளனவா என்று சரிபார்த்துக் கொண்டும் உள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள் கடற்கரையில்.

அவர்களை 'அடக்கி ஆள' ஆயிரக் கணக்கில் புதிய புதிய போலீஸ் படைகள் வந்திறங்குகின்றன. ஆந்திர நாட்டிலிருந்துகூடப் போலீஸ் படைகள் தருவிக்கப்பட்டிருப்பதாக, அன்று தோழர் விநாயகம் அறிவித்தார்.

தம்பி! 19ந் தேதிய கூட்டத்தை

'திராவிடநாடு' இதழில் வெளிவந்துள்ள புகைப்படங்கள் அனைத்தும் 'தென்றல்-திரை' காமிராமென் சாமுவேல் அவர்களால் எடுக்கப்பட்டதாகும். நன்றி. (ஆ—ர்)

யும் கண்டேன், தலைவர்கள் காட்டிய அடக்கத்தையும், அவர்கள் தந்த அறிவுரையையும் எண்ணி எண்ணிப் பார்த்தேன்—என் கண்களில் நீர் துளிர்த்தது!

சென்னை நகரை, என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாம் அன்று இரவு! ஆம், தம்பி! என்ன வேண்டுமானாலும்! எழுக, வீழ்த்துக— என்று தலைவர்கள் அன்று கட்டளையிட்டிருந்தால், எதனை? என்று கூடக் கேட்டுக் காத்துக்கொண்டிருக்க மாட்டார்கள், எதையாவது வீழ்த்திவிட்டு, வேறு எதை வீழ்த்த வேண்டும் என்று கேட்டிருப்பர். அவ்வளவு உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருந்தனர் மக்கள்.

என்றால், எண்ணத்தை வெளியிடாமல் இருக்க முடியவில்லை.

இன்று ஆளவந்தார்களாக உள்ள இதே காங்கிரசாரிடம் இந்த 'ஜனசக்தி' கிடைத்த போது, அம்மவோ! என்னென்ன செய்து மகிழ்ந்தனர்; எதிர்க்கட்சியினரைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். துரைத்தனத்தைத் துளைத்து எடுத்தனர். சட்டமாவது மண்ணாவது! அமைதி என்று கோழைத்தனம் பேசுவதா, அடிமைத்தனத்தைப் போக்கிக்கொள்ளும் அரும் வாய்ப்பினை இழந்து விடுவதா? தத்துவம் பேச இதுவா தருணம்? தாக்குக, நொருக்குக, தண்டவாளங்களைப் பெயர்த்திடுங்கள், தபாலாபீசுகளைக் கொளுத்துங்கள்! சர்க்கார் கட்டிடத்துக்குத் தீ மூட்டுங்கள், தனியே சிக்கிடும் அதிகாரியின் மீது திராவகம் ஊற்றுங்கள்!—என்றெல்லாம் பேசினர்— மக்களை எதெதற்கோ ஏவினர்— பலாத்காரத்தை அவிழ்த்து விட்டனர், மக்களின் ஆற்றலைக்கொண்டு, நாச வேலையைச் செய்து முடித்தனர்.

இதோ, பி. டி. ராஜன் எதிரில் நான்கு இலட்சம் மக்கள். சர்வ கட்சிக் கூட்டணியின் தலைவர் அவர்.

அவர், தம்மிடம் தரப்பட்டுள்ள நான்கு இலட்சம் மக்களைக் கண்டு, என்ன எண்ணுகிறார். இந்தப் பெரும்படையினைக்கொண்டு, எத்தகைய பேயாட்டம் நடத்திக் காட்டலாம் என்றா? இல்லை, தம்பி இல்லை. பெருநோக்கம் கொள்கிறார்! மகத்தானதோர் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறோம் எதையும் சாதிக்கவல்லதோர் ஆற்றல் படை இதோ அணிவகுத்து நிற்கிறது! இதனை நாசப் பாதையில் நாட்டம் கொள்ளாதிருக்கச்செய்ய வேண்டும், தமிழ்ப்பண்பு அழியும் விதமாக போகவிலை நடந்து கொள்ளாதிருக்கச்செய்ய வேண்டும் என்பது ற்றிதான மிக மிகப் பொறுப்புடன் பேசினார்.

எனக்குத் தம்பி, உண்மையாகவே உருக்கமாக இருந்தது. மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு தன் 'வலிவை' எடுத்துக்காட்டுவதற்கான எத்துணை பெரிய வாய்ப்பு இது, இதனைப் பெற்றும், மகிழ்ச்சியடைந்தும், வாய்ப்பு, பெரும் பொறுப்பே தவிர, பகை கக்குவதற்கான சாதனம் அல்ல என்பதை உணர்ந்து பேசுகிறாரே, இவரல்லவா கண்ணியவான், என்று எண்ணிக்கொண்டேன். பெருமிதம் கொண்டேன்.

இலட்சக்கணக்கிலே கூடி இருந்த மக்களிடம் சொன்னேன், தங்களிடம் மக்கள் சக்தி குவிந்திருந்த போது கொடுமையையும் நாசத்தையும் அவிழ்த்துவிட்ட அந்த அரசியல்வாதிகள் எங்கே, தமிழகம் தன் பக்கம் திரண்டு நின்று ஆர்வம் கொப்பளிக்கும் நிலையில் ஆதரவு காட்டி நிற்பது அறிந்தும், அமைதியுடன் நீதியைப் பெற அறநெறி நிற்கவேண்டும் என்று அறிவுரை தரும் இவர் எங்கே! தமிழ் நாட்டின் கண்ணியம், இதோ இங்கு அமர்ந்திருக்கிறது, காண்பீர்! என்று எடுத்துச் சொன்னேன். என் இதயம் பேசிற்று.

அத்தகைய 'கண்ணியவான்' ஜனவரி 27ந் தேதிய சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்—கூட்டணித் தலைவரானார்; பிப். 20, பொதுவேலை நிறுத்தம் கடை அடைப்பு, அன்றே தீர்மானிக்கப்பட்டது.

பி. டி. ராஜன், அரசியலில் இப்போது நுழைந்த டி. டி. கே. அல்ல.

காலமெல்லாம் வேறு வேலை பார்த்துவிட்டு, சமயமறிந்து காங்கிரசில் பதுங்கும் 'சந்து' தேடிடும் சந்தர்ப்பவாதியல்ல.

கப்பல் மூழ்குவது தெரிந்தாலும், அதில் உள்ளோர் தப்பிச்செல்ல வழிசெய்துவிட்டு, நான் தப்பித்துச் செல்வது அறமாகாது, நானும் கப்பலுடன் சேர்ந்து மூழ்கினாலும் கவலையில்லை என்று கூறி, கொடி வணக்கம் செய்தபடி, கப்பல் மேற்தட்டிலே நிற்கும் கப்பற்றலைவன் போல, ஜஸ்டிஸ் கட்சியில் நின்றவர்.

காமராஜ், அரசியல் இயக்கத்தில் தொண்டராக, கொடி ஏந்தியாக இருந்த நாட்களிலே, கோலோச்சும் அமைச்சராக இருந்தவர்; துள்ளி விளையாடும் சிறு பிள்ளைப் பருவத்தில் காமராஜர் இங்கு இருந்த நாட்களில், சீமை சென்று 'பார்–அட்–லா' படித்தவர். பண்புக்கும் அன்புக்கும் உறைவிடம். அரசியல் நாகரீகத்துக்கே ஆசான்.

சர்வகட்சி கூட்டணி ஆபீஸ்

அவரைச் சந்தித்து, பிப்ரவரி 20 குறித்துப் பேசவேண்டும் என்ற அளவுக்குக்கூட, தமது உயர்ந்த இடத்திலிருந்து கீழே இறங்க, காமராஜருக்கு மனம் இடம் தரவில்லை.

அழைத்துப் பேசவும் அவருக்குத் தோன்றவில்லை.

அலட்சியப்படுத்தினார்-கூட்டணி என்றோர் அமைப்பு உருவாகியிருப்பதையே, கவனிக்க வேண்டிய அளவில், நான் சாமான்யனல்ல, ஓஹோ! அதனை அறியீரா? நான் இந்த இராஜ்ய முதல் மந்திரி! என்று எண்ணி இறுமாந்து கிடந்தார்.

'அர்த்தால்' நடத்தத் தேவையில்லை, கோரிக்கைகளை நான் கவனித்துக்கொள்ளுகிறேன் என்று கூறிட, முன்வரவில்லை.

ஒருவேளை, முதல் மந்திரிக்கு இருக்கும் மிகுதியான, பலாச

வேலைகளிலே, இதனை அவர் கவனிக்கவே இல்லையோ என்னவோ, தெரிந்திருக்கிறது, தூற்றிப் பேசியுமிருக்கிறார் செஞ்சியில்:

வேண்டுமென்றே அலட்சியப் படுத்தினார்-துச்சமென்று எண்ணினார் — கூட்டாவது கூழ்ம்பாவது என்றார்!

அப்படிப்பட்டவருக்குக் 'கண்ணியம்' காட்டினார், பி. டி. இராஜன். தமிழனின் புகழ்க்கொடி, உயர உயரப் பறந்தது, தம்பி, பறந்தது!

நாடு, சர்வகட்சிக் கூட்டணியின் அழைப்புக்கு ஆதரவு காட்டிற்று; தம்பி நீ உன் முழுத் திறமையையும் அளித்து பிப். 20 வெற்றி தேடித் தந்திருக்கிறாய். நான் உன்னிடம் எவ்வளவு எதிர்பார்க்கிறேனோ, அந்த அளவு குறைவு, இன்னும் அதிகம் நான் உன்னிடம் எதிர்பார்க்கலாம் என்பதை எடுத்துக் காட்டிவிட்டாய்.

தித்திக்கும் செய்திகளாகவே அனைத்தும் இருந்துவிடவில்லை; குருதி கொட்டினர் நண்பர்கள்; தடியடிக்கும் ஆளாயினர் அன்பர்கள்; அரசியல் பிரச்சினையிலே அக்கறைகொண்டுள்ள தமிழர்கள் அத்துணை பேரும், அவர்கள் எந்தக் கட்சியினராயினும், ஏதேனும் ஓர் வகையில் தமது பங்கினைச் செலுத்த வேண்டும் என்ற ஆர்வத்துடன் பணியாற்றினர் — வெற்றி பெற்றனர். வாழ்த்துகிறேன் — வணங்குகிறேன். அவர்களின் 'தோழமை' இருக்கும் 'பேறு' கிடைக்கப்பெற்றதற்காகப் பெருமகிழ்வு கொள்ளுகிறேன்.

சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்த போதுகூட இப்படி இருந்ததில்லை என்றும்,

ரவுலட் சட்ட எதிர்ப்பின் போதும் இதுபோல் கொதிப்பு எழுந்ததில்லை என்றும்,

இராஜ்யம் பூராவிலும் நடைபெற்ற மிகப் பெரிய அர்த்தால் இதுதான் என்றும்,

எதிர்க்கட்சிக்காரர்கள் ஏற்பாடு செய்த அர்த்தால், இதுபோல் மகத்தானது வேறு ஒன்றும் இதற்குமுன் நடைபெற்றதில்லை என்றும்,

பெரிய பத்திரிகைகளின் ஒத்துழைப்பு ஒருதுளியுமின்றி, அவைகளின் எதிர்ப்பையும் ஏளனத்தையும் தாங்கிக்கொண்டு, வெற்றிகரமாக நடைபெற்றது இந்த அர்த்தால் ஒன்றுதான் என்றும்,

காலித்தனமோ குழப்பமோ, பலாத்காரமோ பயங்கரமோ இல்லாமல், மிக மிக அமைதியாக மக்கள் பெருமளவுக்கு நடந்துகொண்டது, இந்த அர்த்தாலில்தான் என்றும்,

ஓரிரு இடங்களில் கட்டுக்கடங்காத ஆர்வத்தினால் சில காரியங்கள் நடைபெற்றிருந்தாலும், அவை விதிவிலக்கு அல்லது 'திருஷ்டி பரிகாரம்' என்று கூறத்தக்க வகையில்தான் இருந்தது என்றும்,

இந்த அர்த்தாலின்போதுதான், பொதுமக்கள், பயமற்று உலவி, காட்சிகளைக் காண முடிந்தது என்றும்,

பெரும்பணத்தைச் செலவிட்டு, முதலாளிமார்கள் முன் முழங்காற்படியிட்டு, போலி வெற்றி தேடாமல், மனமுவந்து, தாமாக மக்கள் ஈடுபடவேண்டுமென்று முறை வகுக்கப்பட்டு, நடத்தப்பட்டது இந்த அர்த்தால் ஒன்றுதான் என்றும், நேர்மை உள்ளம் படைத்தவர்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் மணம் இருந்தால் ரசிக்கத் தெரிந்தவர்கள், அனைவரும் கூறினர்—பாராட்டினர்.

கண்டித்துப் பேசவும், கேலி பொழியவும், பகை உமிழவும், பொறுமையைக் கக்கவும், தலைவர்கள் இல்லாமற் போகவில்லை.

முட்டாள்கள் — பைத்யக்காரத்தனமான செயல்—என்று மேதை பக்தவத்சலனார் பேசியிருக்கிறார்!

தம்மம்பட்டியிலும் கல்லக்குறிச்சியிலும் குண்டடிபட்டு, உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், நாங்கள் குண்டடிபட்ட போது, குற்றுயிராகக் கீழே கிடந்த போது, மருத்துவரிடம் சிக்கிய போதுகூட எமக்கு இவ்வளவு வேதனை ஏற்பட்டதில்லை; மொழிக்காகவும் மொழிவழி அரசுக்காகவும், நீதிக்காகவும் அறப்போர் நடத்தியவர்களை, முட்டாள்கள் — பைத்யக்காரர்கள் என்று ஏசுகிறாரே ஒரு மந்திரி—தமிழ் இனத்தவர்—அதைக் கேட்கும்போதுதான் எமக்கு அதிகமான வேதனை மூண்டுவிடுகிறது என்று கூறுவர்.

உள்ளம் உண்மையிலேயே வேதனைப்படத்தானே செய்யும்.

கல்லக்குறிச்சியில் மூவர், தம்மம்பட்டியில் மூவர், குண்டடிபட்டு, மருத்துவ மனையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள், வாழவேண்டியவர்கள், அவரவர் இல்லங்களிலே இன்று இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டுள்ளனர். மகனுக்குக் குண்டடி பட்டதாம் — குருதி கொட்டக் கீழே வீழ்ந்தனராம்—குற்றுயிராயினராம்-என்று கேட்டதும், தாய் எப்படிப்பதறினார்களோ என்னென்ன கூறிக் கதறினார்களோ, வம்புதும்புக்குப் போகாதவன், யாரிடமும் இன்முகம் காட்டிப் பேசுவான், ஊருக்கு உழைப்பதிலே ஆசை மிக்கவன், ஒருவரிடமும் விரோதம், குரோதம் கொள்ள மாட்டானே, ஐயோ! அப்படிப்பட்ட என் அருமை மைந்தனை, துப்பாக்கியால் சுட்டார்களாமே! பெற்றெடுத்து வளர்த்துப் பெரியவனாக்க நாங்கள், சுட்டுத் தள்ள சர்க்கார்! இந்தக் கொடுமைக்கு என்னதான் பரிகாரம்? யாரும் இல்லையா நீதி கேட்க?...... என் மகன் என்ன வெடிகுண்டு வீசினானா, வெட்டரிவாள் தூக்கினானா? வீடு புகுந்து கலாம் விளைவித்தானா, போவோர் வருவோரைத் தாக்கினானா? கொலையும் கொள்ளையும் நடத்துவோனை அடக்கப் பயன்பட வேண்டிய துப்பாக்கி கொண்டா, கொள்கைக்காகப் பணியாற்றுவோரைத் தாக்குவது, இப்

(15-ம் பக்கம் பார்க்க)

முகப்பில்......

இப்படியொரு அணி வகுப்பினை என்றுமே கண்டதில்லையென்று வியந்து பாராட்டிய சர்வகட்சிக் கூட்டணித் தலைவர் பி. டி. ராஜன் அவர்கள்.

அவர் கட்டளைப்படி, "தமிழ் நிலப் பகுதிகள் தமிழ் நாட்டுக்கே!", "தட்சிணப் பிரதேசம் வேண்டாம்!", "டில்லியின் அநீதியை எதிர்ப்போம்!", என்று சென்னைக் கடற்கரையில் எதிரொலி கிளப்பிய மாபெரும் மக்கள் வெள்ளம்.

பிப்ரவரி 20ல் தமிழகம் முழுவதும் நடைபெற்ற அர்த்தாலில் தமிழகத்தின் தலைநகரம் என்பதைச் சென்னை காட்டிக்கொண்டு விட்டது. அதுபற்றிய விவரங்களை, ஏட்டில் வரும் புகைப் படங்கள் விளக்கும்.

இவ்வளவு வெற்றிக்கும் காரணமாயிருந்தவர்களை நினைக்கும்போது, "தமிழகம் விழித்துக்கொண்டு விட்டது!", என்கிற நம்பிக்கையே அரும்புகிறது. இந்த நம்பிக்கையைத் தரக் காரணமாயிருந்த நல்லவர்கள்-நாட்டின் தூய மணிகள் — வாழ்க!

உள்ளமுடையாரும் கள்ள நினைவினரும்

ஜனவரி 21

கிளர்ச்சி பூர்ணமாக வெற்றியடைய வேண்டுமென வாழ்த்தி செய்தி அனுப்பியுள்ளார், தமிழர்கள் தங்கள் இலட்சியத்தை அடைய ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்றும் இப் போராட்டத்தில் தாம் மனப்பூர்வமாக ஒத்துழைப்பதாகவும் அவர் உறுதி கூறியுள்ளார்.

•

ஜனவரி 22

"தமிழகத்தில் வட எல்லைபற்றிக் கேட்டுக் கொண்டேயிருக்கிறோம் இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. போதாதற்கு தெற்கு எல்லையும் இந்த நிலை

தமிழகத்தின் எல்லைகள் நியாயமான முறையில் வரவேற்கப்படாதவரையில் தமிழ் நாட்டில் அமைதியின்மையும் கிளர்ச்சியும் உருவாகும். அந்நகைய பரிதாபகரமான சூழ்நிலைக்கு மேலிடத்தவர்களும் சென்னை மாநில அமைச்சர்களும் இடம் கொடுக்கமாட்டார்களென நம்புகிறோம்.

......தமிழன் தன் உரிமை இழந்து வாழும் காலம் இனி இருக்கப்போவதில்லை" என்று அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

*

ஜனவரி 25

தற்போதுள்ள சூழ்நிலையில் தேவிகுளம் பீர்மேடு செங்கோட்டைப் பகுதியை இணைப்பதற்கான எந்த ஆர்ப்பாட்டமும் வேண்டாம் என்றும் அப்படி நடத்தப்படும் எந்த இயக்கமும் விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கலாம் என்றும் கருதுகிறார்.

*

ஜனவரி 26

தேவிகுளம் பீர்மேடு சம்பந்தமாக மேற்கொள்ள விருந்த உண்ணு நோன்பினை பல காரணங்களால், மேற்கொள்ள இயலவில்லை என்று தெரிவிக்கிறார்.

* * *

இடையில், நான்கைந்து நாட்கள் தான்! அதற்குள் நமக்கேற்பட்ட ஆனந்தத்தை நீடிக்கவிடவில்லை, அவர்! முன்னுக்குப்பின் முரண்பாடான அறிக்கைகள் — முடிவே, தலைகீழாகிவிட்டது.

காவி கமண்டலமேந்தி கனகசபேசனைத் தொழுதாலும், அடியவர்களில் ஒருவராகிவிட்ட அன்பருக்கு, செந்தமிழ் மீது இருக்கும் ஆசைதான் என்னே என்று கருதினோம் முன்பொருநாள் தமிழிலேயே கோயில்களில் அர்ச்சனைகள் நடைபெற வேண்டும் என்று அவர் கூறியது கேட்டு. அரும்பு, மலரவில்லை! கருகிவிட்டது!

அதுபோலவே, தமிழக எல்லைப் பிரச்னையிலும், குன்றக்குடிகளார், வீர முழக்கமிட்டு, மக்கள் உரிமைக்காக, மகேசனுக்கும் மார்க்க சீலர்களுக்கும் இடையிலிருக்க வேண்டிய எனது வேலையைக்கூட ஒதுக்கிவிட்டு, உண்ணு நோன்பிருந்து உரிமைக் குரல் எழுப்புவேன்!— நாட்டுக்காகப் பாடுபடுவேன்! — என்றார். மகிழ்ந்தோம்; மகிழ்ச்சி நிலைக்கவில்லை, கருகிவிட்டது.

மதத்துறையிலிருப்போரும்மக்கள் உள்ளமே மகேசன் கோயில் என்று கருதி அம்மக்களின் கண்ணீரைத் துடைக்க, உரிமைகளைப் பெற்றுத்தர முன்வருவதென்பது, மிக மிக மகிழ்க்கூடியசெயல். ஆனால், நமது

உடுமலையான்

மார்க்கதாதாவோ, பாய்வேன் எனக் கூறி பதுங்குமிடம் தேடிக்கொண்டு விட்டார்.

ஆனால் மதத்துறையில் அவரைப்போலவே ஈடுபட்டிருந்த ஒருவருடைய செயல், அந்நாட்டு மக்களை மட்டுமல்ல, சர்க்காரையே சிந்திக்க வைத்தது.

நம் நாட்டு ஆதீனங்களைப் போல், காவிக்குப்பின்னால் காசையும் காம சுந்தரிகளையும் வைத்திருந்தவரல்ல அவர். உண்டு கொழுக்க, கோயிலுக்கு 'இனாம்' நிலமும் இல்லை. அவரை ஊக்குவிக்க உற்ற நண்பர்களும் இல்லை. அவருடைய தோழர்களெல்லாம் 'கந்தல் பொறுக்கி'கள் தான்.

அவர் வாய்திறந்து கேட்டார்— மக்கள் மனந்திறந்து கொடுத்தார்கள்.

"கேளுங்கள், கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற வாய்மொழி தத்ரூபமாகச் செயல்படுவதை நேரில் கண்டார் அவர்.

'ஐயாயிரம் கம்பளிகள் வேண்டும் என்றார் அவர். இருபதினாயிரம் கம்பளிகள் வந்து குவிந்தன.,

ஆயிரம் ஜோடி, மிதியடிகள் கொடுப்பீர்களா என்று கேட்டார்— ஐயாயிரம் தருகிறோம் என்று கொண்டுவந்து கொட்டினார்கள்.

மூவாயிரம் 'ஓவர் கோட்டு'கள் கிடைத்தால்போதும் என்று சொல்லி வாய்மூடா முன்னர் பதினையாயிரம் மேலங்கிகள் வந்து குவிந்தன.

கம்பளிகள்! மேலங்கிகள்!! அத்தனையும் மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக.

மேலாடையின்றி மக்கள் அவதிப்படுகிறார்கள்—குளிர், கொட்டுகிறது தேள்போல அவர்களும் குழவிகளை— அவர்களுக்காகக் கேட்டார்.

அண்மையிலடித்ததே புயல் தென் தமிழகத்தில், அதற்காகவா எனக்கேட்கக்கூடும் தோழர்கள். துயருற்ற மக்களுக்காகத் துணி

களைத் திரட்டிய அத்தூயவர் யார், எங்குள்ளார், எந்த ஆதீனத்துக்கு அதிபதி, எந்தக்குடிக்கு அடிகள், என வினவுதல்கூடும்.

அப்படியொரு நல்லவர், இங்கல்ல! பாரிசில்! இந்து மதத்திலல்ல! கிருத்துவ மார்க்கத்தில்!!

இவ்வளவு செல்வாக்கையும் அந்த மதத் தலைவர் ஏழே நிமிஷங்களில் பெற்றார். எல்லாப்பத்திரிகைகளும் முகப்புப்படம் போட்டு பூரித்தன. நல்லவர்களெல்லாம் அவரைப் பாராட்டினார்கள், நாட்டின் நாயகர்கள் பிரமித்தார்கள். இவ்வளவுக்கும் அவர் மாதா கோவில் பாதிரிதான்.

ஆனால் மனிதனைக்கண்டு, அவன் படுகிற கஷ்டநஷ்டங்களை தான் படுவதாக உணர்ந்து, அதற்கு வழி சொன்னவர். சாலையிலே சுருண்டு கிடந்த எலும்புக் கூடுகளையும், விறைத்த 'கட்டைகளையும் கண்டு கண்ணீர் விட்டவர்.

கண்ணீர் விட்டபிறகு பாதாமும் கல்கண்டும் கலந்த பாலைக் குடித்துவிட்டு, 'அந்தப்புரத்'திற்குள் நுழைந்தவரல்ல நமது சனனிதானங்களைப் போல.

கொட்டுகிற பனியில். நடுக்கும் குளிரில், பாலத்திற்கடியிலும் பாதையோரத்திலும் பால் மணம் மறவாத பாலகர்களைத் தாவிக்கொண்டு படுத்துறங்கிய பெண்கள், 'கையதுகொண்டு மெய்யது போர்த்தி' எண்சாண் உடம்பையும் ஒரு சாணுக்கிககொண்டிருந்த மனித உருவங்கள், மண்மாதாவின் மடியையே 'அரண்மனை'யாக்கிக் கொண்டவர்கள்—இப்படிக் காட்சி' அளித்தது பாரிஸ் நகரம் சென்ற ஆண்டு குளிர் காலத்தில்.

சூடான 'சூப்'பும் பேரீச்சையும் கொண்டுவந்து, இந்த 'சாகப்பிறந்தவர்'களுக்குக் கொடுத்துவிட்டு மௌனமாகத் திரும்பிவிடுவார் அந்தப் பாதிரி—அபேபெர்ரி — கல்லைத் தலையணையாக்கி 'கையை மடக்கி' படுத்துறங்குபவர்களிடம் நான் என்ன பேசுவது என்றாராம் அவர். ஒரு நாள்! கூடாரம் ஒன்றை காலி இடத்தில் நிர்மாணித்து, புல் வியாபாரியிடமிருந்து கொஞ்சம் புல் வாங்கி மேலே பரப்பி, படுக்கைகளும் கம்பளிகளும் சிலரிடமிருந்து பெற்று, தன் சிறு காரிலே 'சிதறி'க்கிடந்தவர்களை ஏற்றிக் கொண்டு கூடாரத்தில் புகலிடம் கொடுத்தாராம். ஒவ்வொரு இரவும் இந்தப் பணி தொடர்ந்து நடந்தது. ஆனால் இவரது கூடாரத்தில் அதிகபட்சமாக அறுபது பேர்தான் அடைபடமுடிந்தது.

இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் காணவேண்டுமே என்று துடித்தார், பரமபிதாவை அழைப்பதற்கு பதிலாக, வானொலி நிலையத்தாருககுத்தான்பேச இடம் தருமாறு மனுபோட்டார். கோயில்பாதிரிக்கு வானொலிப் பேச்சா! என்று முதலில் தயங்கிப் பிறகு பேச அனுமதித்தார்கள்.

அதுவும் ஏழே நிமிஷங்கள்!

பெர்ரி பேச்சைத் தயாரித்துக் கொண்டு போகவும் இல்லை. மைக்கின் முன் நின்றார். வார்த்தைகள் உணர்ச்சிப்பெருக்கில் கடல் மடை திறந்ததுபோல வெளிவந்தன

"என் அருமை நண்பர்களே, கொஞ்சம் உதவி புரியுங்கள். நேற்று இரவு மூன்று மணி சுமாருக்கு குளிரால் விறைத்து ஒரு இளம் பெண் செத்துவிட்டாள், தன் கையில் குடியிருந்த வீட்டு வெளியேற்ற உத்தரவை வைத்திருந்தாள் ஒவ்வொரு இரவும் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நடுவீதியில் அலைகிறார்கள் குந்த இடமில்லாமல், உண்ண உணவில்லாமல், பிறந்த மேனியராய்.

ஒவ்வொருவரும் பரஸ்பரம் அன்பு பாராட்டிக்கொள்ளும் பண்பை இந்தச் சமயத்தில் கையாளவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இப்போது உடனடியாகத் தேவைபபடுவதெல்லாம் கம்பளிகள், கூடாரங்கள், வெப்ப அடுப்புகள். இவைகளையெல்லாம் ரோஸஸ்டர் உணவுவிடுதிக்கு அனுப்பி வையுங்கள" என்று பேசி முடித்தார்.

இந்த ஏழுநிமிஷ வானொலிப்பேச்சுக்குப பின்னர் பிரானசு நாடே இவரைப் பற்றிப பேச ஆரம்பித்தது.

மனிதனுக்கு மதிப்புக் கொடுத்தார் இந்த மதவாதி.

மனிதனுக்காக நெஞ்சுருகிக் கூவினார். மககள மன்றமும் இவர் கூவியதைக் கேட்டு மதிப்பளித்தது.

பேசிய பத்து நிமிடங்களுக்குப் பிறகு அந்தப் பிரஸ்தரப் ஹோட்டலுக்கு ஒரு 'போர்ட்டர்' கம்பளிகளையும உடைகளையும் கொணடுவந்து குவித்தான். ஒருமணி நேரத்தில் விடுதியில் இருந்த நாற்காலிகளையெல்லாம் அபபுறப்படுத்தி தேடி வரும் மூட்டைகளுக்கு இடம் காலி செய்து தரவேண்டி ஏற்பட்டது. அந்த வீதியே கார்கள் மயமாகக் காட்சியளித்தது. நடைபாதைகளில் மக்கள் 'சாரி சாரி'யாகக்கூடி விட்டார்கள்.

'நான் வீட்டுக்கு நடந்தே போய் விடுகிறேன்' என்று சொல்லி ஒருவன் தன் பையிலிருந்த நூற்றுப பத்து, பிராஙகுகளை 'நன்கொடை'யாக அளித்தான். ஒரு கசாப்புக் கடைக்காரன் ஐம்பது பவுண்டு கறியை எடுத்துக்கொண்டு ஓடிவந்தான் பெர்ரியிடம் தருவதற்கு. ஒரு வருஷத்திற்கு வசூலாகும் தொகையில் ஐந்து சதவிகிதப் பணத்தை தந்துவிடுவதாக ஒரு சர்க்கஸ் கம்பெனி வாக்களித்தது. மாஜி ஜனாதிபதி வின்ஸன்ட் ஏரியல் ஐம்பதினாயிரம் பிராஙகுகள அனுபபிவைத்தார். நில தானம் கொடுக்கப் பலர் முன்வந்தனர்.

நேரம் ஆக ஆக வரும்கூட்டத்தை சமாளிக்க இருபத்தைந்து போலிஸ்காரர்கள் வரவேண்டி ஏற்பட்டது. தலைச்சுமைகளை வைத்துக் கொண்டு அரை மைல் நீளத்திற்கு மக்கள் நின்று கொண்டிருந்தனர். விடுதியின் தரையிலிருந்து உச்சி வரை மூட்டைகள் மயமாக வந்து நிறைந்தது. சிறு இரயில்வேஸ்டேஷனை திறக்க வேண்டி ஏற்பட்டது.

பாரீஸ் நகர சரித்திரத்திலேயே ஒருவருடைய வேண்டுகோளுக்கு இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு அதிகமான அளவில் 'பதில்' வந்ததே கிடையாதாம். பெர்ரி வீதியில் நடந்து போகப்போக, அடையாளம் தெரியாதவர்கள் கூட பணத்தைக் கொண்டு வந்து பையில் திணித்தார்களாம். உணவு விடுதிக்கு பெர்ரி சாபபிடப்போனால், தின்பண்டங்களோடு நாணயங்களையும் கொண்டு வந்து மேஜை மீது, பரப்பி வைப்பார்களாம்.

ஆறு வாரங்களில் 450 மில்லியன் பிராங்குகள் பணம் சேர்ந்தது. வீடற்ற அனாதைகளைத் தேடிப் பிடிப்பதற்கு லாரிகள் வந்து சேர்ந்தன போலிஸ் இலாகாவும் உதவி செய்ய முன்வந்தது.

* * *

லயான்ஸ் நகரத்தில் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெரும் பணக்காரரின் மகனாக ஹென்றி அன்டோனி குரூஸ் என்ற ஆரமபப் பெயரோடு பிறந்து, பின்னர் பாதிரி பெர்ரியானவரது சாதனை இது. பத்தொன்பது வயதானபோது ஆலயத்தில் சேர்ந்த சமயம் தன் தந்தையாரிடம் அதிகப் பணம்

கேட்டாராம், தனக்குத் தரும்படி. தந்தையும் கொடுத்தார். பணத்தைப்பெற்ற இரண்டு மணி நேரத்திற்குள்ளாகாகவே, ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்கிவிட்டார். அந்த நாளிலிருந்து "நான் என் உடைமை என்று சொல்லத்தக்க எந்தப் பொருளையும் வைத்துக் கொள்ளவில்லை" என்றார் பெர்ரி.

ஆப்பிரிக்காவில் மதப் பணிபுரிய வேண்டும் என்ற இலட்சியத்தில் இருந்த இவர், போர்க் காலத்தில் போர்ப் படையிலும் சேர்ந்து பணி புரிந்து பதக்கங்கள் பல பெற்றிருக்கிறார். பின்னர் பார்லிமெண்ட் தேர்தலுக்கு நின்று ஜெயித்தார். பகலில் பார்லிமெண்டில் இருந்து விட்டு, இரவு வீடுவந்து சேர்ந்ததும், மக்களின் கஷ்டங்கள் தீரவழி என்ன என்ற சிந்தனையில் ஆழ்ந்து விடுவாராம்.

1949ம் ஆண்டு ஒருநாள் இரவு இவரது வீட்டின் கதவை யாரோ தட்டியசப்தம் கேட்டது. திறந்து பார்த்ததும், இருபதுவருஷம் தண்டனையை அனுபவித்து விட்டு வந்து ஒரு 'காவாலி' நின்றுகொண்டிருந்தான், எந்தக் கேள்வியையும் கேட்காமல் உள்ளே அழைத்துக் கொண்டுபோய் உணவும் உறைவிடமும் கொடுத்தார். ஸீன் நதியில் விழுந்து தற்கொலை செய்துகொள்வதினின்றும் தடுக்கப்பட்ட ஒருவன், ஒரு செக்கோஸ்லேவேகிய அகதி, திவாலான ஒரு வியாபாரி இப்படி வந்து சேர்ந்தார்கள்; ஒன்றாகப் படுத்துறங்கி, தனக்கு கிடைக்கும் பார்லிமெண்ட் அலவன்ஸிலிருக்கும் சிறுதொகையை இவர்களுக்குச் செலவிற்கும் கொடுத்து வந்தார்; இந்தக் கூட்டத்தை கூட்டாளிகள் என்று அழைத்தார் பெர்ரி. கொஞ்சம் விசாலமான இடத்திற்கு கொஞ்ச நாள் கழித்துப் போய்க் குடியேறினார்கள்.

பக்கத்தில் குடியிருந்த ஒரு குடும்பத்தின் சிறு குழந்தைகள் இரண்டு குளிரில் விறைத்துச் செத்தன. இதைக் கண்ட பாதிரி அந்தக் குடும்பத்தை மாதா கோவிலில் வந்து தங்கும்படி செய்தார்.

பரமபிதாவின் சன்னிதானம் பரம ஏழைகளுக்குப் புகலிடமாயிருப்பதில் பாவம் இல்லை, தவறுமல்ல என்று கருதினார் அந்தப் பாதிரி.

வீட்டுப் பிரச்னை பிரான்சில் பெரிய சிக்கலாக இருந்தது. வாடகைக் கட்டுப்பாட்டு விதிகளோ மிகக் கடுமையாக அமலில் இருந்தன. சில ஏக்கர் நிலம் வாங்கித் தேவையான சாமான்களையும் கொஞ்சம் கொஞ்சம் வாங்கி வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள் பெர்ரியும் கூட்டாளிக் கூட்டமும். அனுமதி பெறாமல் வீடுகள் கட்டக் கூடாது என்று அதிகாரிகள் தடுக்க முயற்சித்தார்கள். பெர்ரி தன்னைச் சுற்றிலும் வாழ்ந்தபிள்ளைகளின் பிறந்த தினத்தன்று வாங்கிய அத்தாட்சிப் பத்திரங்களை அதிகாரிகளின் முன்னிலையில் கொண்டுபோய்க் கொட்டினார்.

"இதோ பார்த்துக்கொள்ளுங்கள், அவர்களுக்கு அனுமதி இருக்கிறது, இந்த உலகத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு அவர்களுக்குள்ள அத்தாட்சிப் பத்திரங்கள் இவைதான்" அதிகாரிகள் வாயை மூடிக்கொண்டு போய்விட்டார்கள். வீடுகள் கட்டும் வேலை மட்டும் தங்கு தடை இல்லாமல் நடந்து வந்தது.

1951ல் பார்லிமெண்டின் ஆயுள் முடிந்தது. பெர்ரி சுயேச்சை அபேட்சகராக நின்று தோற்றுப் போனார். இப்போது வருமானத்திற்கு வழி இல்லை. ஒருநாள் கூட்டாளிகளில் ஒருவர் கந்தல் துணிகளைச் சேகரித்து விற்றதன் மூலம் ஆயிரம் பிராங்குகள் கொண்டுவந்து கொடுத்தார். உடனே ஐம்பது பேரை சாக்குகளோடு அனுப்பினார் பெர்ரி. சைக்கில்கள், கடிகாரங்கள் 'ரிப்பேர்' செய்தும் பணம் திரட்டினார்கள். சிமெண்ட் பிளாக்'குகள் செய்யும் ஒரு தொழிற்சாலையே ஆரம்பித்தார்கள். பிரான்சில் குடியிருக்க வீடற்றவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்து திகைத்துப் போனார் பெர்ரி.

1953ல் சர்க்காரிடம் தன் வீடு கட்டும் திட்டத்தைச் சமர்ப்பித்தார். சர்க்கார் இவரது திட்டத்தை நிராகரித்துவிட்டது. இந்தச்செய்தியைப் படித்து முடித்தபோது, பக்கத்தில் லாரிக்குக் கீழ் தாயுக்கும் தகப்பனுக்கு மிடையே ஒரு மூன்று மாதக் குழந்தை குளிரில் விறைத்துச் செத்துக் கிடக்கும் தகவலை ஒரு கூட்டாளி வந்து தெரிவித்தான். அன்றிரவே பிரான்சின் புனர்நிர்மாண மந்திரி மாரிஸ் லெமருக்கு பெர்ரி ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். வீடற்றோர் படும் அவதியைக் குறிப்பிட்டு, அந்தக் குழந்தையின் அந்திய யாத்திரையை நேரில் வந்து பார்க்கும்படியும் வேண்டினார்.

அன்று மாலை கூட்டாளிகள் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். மந்திரியும் சவ ஊர்வலத்தில் கலந்து கண்ணீர் விட்டார்.

அடுத்த வாரமே பெர்ரி கேட்ட தொகைக்கு பன்னிரண்டு மடங்கு அதிகமாக, அவசரக் குடியிருப்பு இடங்களுக்கு சர்க்கார் 'மான்யம்' தந்தது. பெர்ரி எடுத்துக்கொண்ட சலியாத முயற்சியால் பாரிஸ் நகரச் சுற்றுப்புறங்களில் வீட்டு நெருக்கடி கொஞ்சம் குறைந்து வந்தது. மற்ற நகரங்களும் இவரது உதாரணத்தைப் பின்பற்ற ஆரம்பித்தன.

பாபாத்மாக்களுக்கும் பரமண்டலத்தில் இருக்கும் 'சிலுவை' நாதருக்கும்' இடையில் 'பாலமாக' இருந்த பாதிரியாரால், சமூகத்திலும் சர்க்கார் வட்டாரங்களிலும் ஒரு மாற்றத்தைச் செய்யமுடிந்தது பிரான்சில், மனிதனை பூரணமாக அவர் உணர்ந்ததால், 'நடமாடும் கடவுள்கள்' நடு வீதியில் பட்ட துன்பத்தை ஊனக் கண் கொண்டு பார்த்ததால்.

தன்னைப்பற்றிச் சொல்லும் போது பெர்ரி குறிப்பிட்டார், 'சர்க்கார் எதையாவது செய்யட்டும் என்று தூண்டுவதற்கு, என்னால் 'இயன்றதைச் செய்தேன்' என்று.

மதத்தையும் கடவுள் பக்தியையும் கட்டிக் காத்து வளர்ப்பதுதான் எங்கள் பணி, அதற்கெனவே நாங்கள் காவிபூண்டோம் துறவு பூண்டோம் என்று கூறும் 'ஓம் நமசிவாயங்கள்' கடவுளும் மதமும் எங்கிருக்கிறது எனபதை முதலில் கண்டுகொள்ள வேண்டும்.

மணியடிக்கும் கோயில் பாதிரி, கந்தல் பொறுக்கிகளைச் சேர்த்துக் கொண்டு மனிதப் பணி புரிகிறார். இங்கு மகேஸ்வரனின் 'வளர்ப்புப் பிள்ளைகள்' எல்லாம் 'எந்தன் சிவகாமி நேசன் செயல்' என்கிறார்கள்! திடீரென, என்றாவது இதயத்தில், ஏதாவது மக்களுக்குச் செய்யவேண்டும் என்றெண்ணினாலும் உடனே சுகபோகம், சோபிதம் குலையா வாழ்வு, ஆராதனை, அடியார் தரும் காணிக்கை, இவைகளை விட்டுவிட்டேன் அலையவேண்டும்—"அம்மையப்பா! அரகரா!" என்று சொன்னால் போதாதா, என்று இருந்து விடுகிறார்கள்!

மக்கள் பணியே மகேசன் சேவை—
இது, அவர்தம், இதயக்குரல்.

மகேசன் பேரால் மக்களை எத்திப்பிழை—
இது, இவர்தம், வாழ்க்கை வழி. ★

வெடி மருந்துகளைச் சேகரித்து வைக்க ரூபாய் ஒரு லட்சம் செலவில் பாதாள அறைகள் கட்டப் போகிறார்களாம்! இந்த வெடி மருந்துகள் எதற்குத் தெரியுமா? சபரிமலை அய்யப்பனுக்கு வேட்டுப் போட! சிரிப்பு வரும் உங்களுக்கு. செய்தி ஜனவரி 3ந் தேதி வந்திருக்கிறது. வெடி மருந்துகளைச் சேமிக்க இடமில்லாததால் சென்ற காலங்களில், திருவிழாவின் போது வெடி விபத்துக்கள் ஏற்பட்டு, பல உயிர்களுக்குச் சேதம் வருவதுண்டாம். அதைத் தடுப்பதற்காகவே சபரிமலை சாஸ்தா கோயிலிலும் சுற்றிலும் பாதாள அறைகள் கட்டப்போகிறார்களாம்.

* * *

ஆண்டவர்களுக்குத் திருவிழா நடத்துவதில் இவ்வளவு அக்கரை காட்டுகிறார்களே சர்க்கார். இவர்கள் பால் இரக்கம் வைத்து, தனது பக்த குழாம்களைப் பராமரிக்கும் பொறுப்பைக்கூட பகவான் ஏற்றுக்கொள்ள மாட்டேனென்கிறார்! பாருங்களேன், கும்பகோணம் மகாமகத்துக்கென்று, ஒரு விசேட கமிட்டி, கலெக்டர் முகாம், போலீஸ் படை, இத்தனையும் போதாதென்று சுகாதாரப் படைகள் வேறு. அங்கு வந்து போவோருக்கு ஊசிகள் குத்தி வியாதிகள் பரவாமல் தடுப்பதே, பெரியதொரு பிரச்னையாக இருக்கும் போலிருக்கிறது.

* * *

மகாமகத்துக்கென்று விடப்படும் தனி இரயில்களின் பட்டியலைப் பார்க்கும் போது ஆண்டவனுக்கும்—பக்தர்களுக்குமிடையேயுள்ள தொடர்பு அறுந்துபோகாமலிருக்க சர்க்கார் எடுத்துக்கொள்ளும் ஆர்வமும் அக்கரையும் மிகப் பெரிதாயிருக்கிறது. சபரிமலை கோயிலுக்கு, முன்பெல்லாம் போவதென்றால் 5 முதல் 8 நாட்கள் பிடிக்குமாம். இப்போது ஒன்றரை நாளைக்குள் கோவிலை அடைய மோட்டார் செல்லும் பாதைபோடப் பட்டுள்ளதாம்.

* * *

நாகபுரியில் ஜனவரி 8ந் தேதி இந்திய ரஸ்தா காங்கிரசின் 20ம் மாநாட்டை ஆரம்பித்து வைத்த ம. பி. கவர்னர் டாக்டர் பட்டாபி, இரட்டை மாட்டு வண்டி போக்குவரத்து முறையை உயிர்ப்பிக்கக் கேட்டுக்கொண்டாராம். இவ்விதம் செய்வது போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் என்றாராம். அதற்கு ஒரு உதாரணம் கூடச் சொன்னாராம்! அதாவது, 1950ல் டில்லி உணவு மந்திரியாகயிருந்த டாக்டர் ராசேந்திரபிரசாத் பம்பாயிலிருந்து பாட்னாவுக்கு ஒரு பம்பு செட் கொண்டு சேர்க்கும்படி உத்தர விட்டாராம். இரயில் 'வாகின்' கிடைக்காததால், அது வந்து சேர, ஒரு ஆண்டு பிடித்ததாம்! ஒரு ஆண்டு—பொய்யல்ல; உண்மை!! இவ்வளவு திறமையாகப் பணியாற்றும் இரயில்வேக்களுக்கு மட்டும், திருவிழா என்றால் எப்படி நேரத்தையும் நினைப்பையும் செலவழித்து, பரபரப்பாக வேலை செய்ய முடிகிறதோ — அதுதான் புரியவில்லை, நமக்கு.

கேட்டீரா, சேதியை!

* *

"பொதுஜன வசதிக்காகச் செய்கிறோம்!", என்றுதான், இரயில்வே போர்டாரைக் கேட்டால், பதில் தருவார்கள். ஆனால், இதோ ஒரு தகவல் வருகிறது, டில்லியிலிருந்து! மொழிவாரிப் பிரிவினைக் கிளர்ச்சியின் காரணமாக, ஆத்திரம் கொண்ட மக்களால் எரிக்கப்பட்டதல்லவா, பூரி புகைவண்டி நிலையம். அதைச் சமீப காலத்தில் புதுப்பிப்பதில்லையென்று டில்லியார் முடிவுசெய்து விட்டார்கள். அப்போதுதான், மக்களுக்குப் புத்தி வரும்; அதற்காகவே இந்த முடிவு செய்துள்ளோம் என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது!! எப்படி, 'பொதுஜன வசதி'யின்பால் சர்க்காருக்குள்ள அக்கரை?

* * *

சபரிமலை—மகாமகம் — இப்படி, நாம் இருக்கின்ற இதே சமயத்தில் நியூயார்க்கில் என்ன செய்துகொண்டிருக்கிறார்களாம், தெரியுமா? ஒலி ஓசையைக் காட்டிலும் 18 மடங்கு, அதாவது மணிக்கு சுமார் 17,500 மைல் வேகத்தில் பறக்கக் கூடிய 'ராக்கெட்' விசை விமானத்தை எப்படி உற்பத்தி செய்யலாம் என்பது குறித்து ஆறு அமெரிக்கக் கம்பெனிகள் போட்டா போட்டி போட்டுக்கொண்டு முயற்சித்துக் கொண்டுள்ளனவாம்.

* * *

சாதாரண மருதாணி இலை! அதை வண்டிவண்டியாகப் பஞ்சாபிலும் பம்பாயிலும் உற்பத்தி செய்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி, ஆஸ்திரேலியா, சிரியா முதலிய நாடுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 16-லட்சம் ரூபாய்க்கு அனுப்புகிறார்களாம். அதை 'முப்பத்து முக்கோடி' தேவர்களில்லாத நாட்டார், மருந்தாக்கியும், 'நெயில் பாலிஷாக'வும், செண்டாகவும் ஆக்கி, இங்கே திருப்பி அனுப்புகிறார்களாம். விஞ்ஞானம் வளருது மேற்கே! அஞ்ஞானம் குழி பறிக்குது இங்கே!

* * *

இலை, என்றதும் ஒரு சேதி ஓடி வருகிறது. மருதாணி இலையைப் பயன்படுத்த முடியா விட்டாலும் விற்றுவது 16 லட்சத்தைச் சம்பாதிக்கிறார்கள் பம்பாயிலும் பஞ்சாபிலும்! அதற்குக்கூட இலாயக்கில்லாதவர்களாகவல்லவா, நாமிருக்கிறோம். அதைப் புரிந்துகொண்டிருப்பதால்தான் போலும், அமிருதசரசிலே காங்கிரஸ் மாநாடு நடத்திய பஞ்சாப் கமிட்டியினர் ஒரு 'ஆர்டர்' போட்டார்களாம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு. என்ன தெரியுமா, அது? சாப்பாட்டுக்கு உபயோகமாகக் கூடியதாக 2 லட்சம் தையல் இலைகளை அனுப்பி வையுங்கள் என்று. சாப்பாட்டில் வல்லவர்கள், என்று அவர்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்!

★

வருந்துகிறோம்

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களது தந்தையார் திரு. கே. நாகைநாதர் அவர்கள் கடந்த 8—2—'56 அன்று சென்னையில் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். தந்தையை யிழந்த தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கும் நண்பர் முத்து அவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

முகமது இஷாக், ஆறறிவு படைத்தவன், அகண்ட பாரதத்தின் பெரிய மடியிலே பிறக்கும்பாக்கியம் செய்தவன்—ஆனால், அவனால் வாழ முடியவில்லை.

என்ன செய்வான்? எத்தனை நாட்கள், ஏங்குவான்! வானளாவும் கூட கோபுரங்களுண்டு, வெளி நாட்டிலிருந்து வருபவர்களை உபசரிப்பதற்கென்று சர்க்காரே பணம் கொடுத்து விருந்து மண்டபம் கட்டுகிறார்கள், தினசரி வெளிநாடுகளிலிருந்து வரும் அரசர்களையும் அமைச்சர்களையும் வரவேற்கச் செலவழிக்கும் பணத்தில் ஒரு துளி கிடைத்தாலும் அவன் வாழ்வு துளிர்த்துவிடும், ஆனால் என்ன செய்வது? சுதந்திர இந்தியாவின் குடிமகனல்லவா! அதனால், டில்லிப் பட்டணத்தைச் சுற்றிச் சுற்றி அலைந்திருக்கிறான்.

"ஐயா, பசி!"

வருவோர், போவோரிடம் இப்படிச் சொல்லி பிச்சைகூடக் கேட்க முடியாது — ஏனெனில் பிச்சைக்காரர்கள் உலவுவது தலைநகரின் அழகையும் மதிப்பையும் கெடுக்கிறது என்பதால், அவர்களை யெல்லாம் பிடித்துக்கொண்டுபோய் தனியிடங்களில் வைக்கவேண்டுமென்பது, கட்டளை.

அவனுக்குக்கூடச் சம்மதம்தான் இப்படி அலைவதைக் காட்டிலும், நிம்மதியாக இருக்கலாம், அல்லவா அங்கு—அதனால்.

பிள்ளை குட்டிகள், மனைவி!—அவர்கள் கதி?

மிருகமல்லவே, கேவலம், மனிதனுயிற்றே—இதனால், பாசம், பற்று முதலியவை அவனைப்பற்றிக் கொண்டன. அவ்வழி செல்லவில்லை! வேலை கிடைப்பதோ — குதிரைக் கொம்பு. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெளியிட்டு விட்டோம், 7100 கோடி ரூபாய் (ஏ! அப்பா!) செலவு செய்யப் போகிறோம், இந்தத்திட்ட முடிவில் ஏறக்குறைய பத்துலட்சம் பேருக்கு வேலை கொடுக்கமுடியும் என்கிறார் திட்ட மந்திரி நந்தா. ஐந்தாண்டுத் திட்டம் முடிவதெப்போது? அவனுக்கு வேலைகிடைப்பதெப்போது! அதிலும், அந்த பத்து இலட்சத்தில் இவனுக்குச் சீட்டுவிழ, சிபார்சுக்கு ஆள் ஏது?

அதனால், சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

பாக்கியம் செய்த முதலை!

ஒன்பது அடி, அந்த முதலையின் நீளம். எங்கேயோ, பிடித்தான்.

முதலை — மூர்க்கமான, ஜந்து! அவனுக்கும் தெரியும். அதனால், என்ன? கடித்தால், சாகவேண்டும் என்பது, பாம்பாட்டிக்குத் தெரியாமலாயிருக்கிறது. எனினும், ஏன் அவன் பாம்பாட்டு பழகுகிறான், பாழும் வயிறு இருக்கிறதே! அதனால், எப்படியோ, முதலையைப் பிடித்து, வாயைக் கட்டி, ஒரு மேஜைமீது வைத்தான்.

"ஓடிவா, ஓடிவா! அதிசயமான காட்சி. உயிருள்ள முதலை, இதோ மேஜையின் மீது. வேடிக்கைக் காட்டுகிறேன், வா, தம்பி, வா" என்று கூவினான்.

ஏழை மனிதனின் வறுமைக் கோலத்தைக் கண்டு, அதிசயமோ கவலையோ கொள்ளாத கூட்டம், கேவலம் அந்த முதலையைக்காணக் கூடிற்று—நல்ல வசூல்!

இன்றோரிடம்—நாளைக்கு ஓரிடம் —அவனுடைய பிழைப்புக்கு வழி கிடைத்துவிட்டது

அதே சமயம் ஜீவரட்சக சபைக்குச் செய்தி போயிற்று.

ஒரு ஜீவன் வாழ முயற்சி செய்வது கண்டு, அவர்கள் மகிழவில்லை! ஓடோடியும் வந்தனர்—அவர்களது திருப்பணியைக் காட்டிக்கொள்ளச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது — விடுவார்களா? ஓடினார்கள், சர்க்காரிடம்! போலீசை, அழைத்துவந்தார்கள். அவன் கைது செய்யப்பட்டான், ஜனவரி 31-ந்தேதி, டில்லியில்.

*

"ஜீவனை, நீ சித்திரவதை செய்யலாமா?"

"நானும ஒரு ஜீவன்தானே, நான் சித்திரவதைப்பட்டேனே, அப்போது கேட்கயாரும் வராதது ஏன்?"

"நீ, மனிதன்! அது வாயில்லாப் பிராணி."

"வாயில்லாப் பிராணியைக் காப்பாற்றக்கூட ஒரு சங்கம் இருக்கிறது. ஆனால் வாயுள்ள மனிதனைக் காக்க எங்கே இருக்கிறது சங்கம்?"

"ஏது, நீ அதிகப்பிரசங்கியாக இருப்பாய்போலிருக்கிறதே!"

"உண்மைக்குப் பேரு, அப்படியும் உண்டுங்களா?"

*

இப்படி எந்தவித 'வசனமும்' பேசப்படவில்லை, கோர்ட்டில்.

அவனைக் கூண்டிலேற்றினார்கள் —மாஜிஸ்திரேட் கேட்டார், "நீ முதலையை வைத்துக் கொண்டு, காசு சம்பாதித்தாயா?", என்று. பொய் சொல்லவில்லை, அவன்! அதனால், அவனுக்கு ரூபாய் 25 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார், டில்லி மாஜிஸ்திரேட்!!

பணக்காரர்கள் வருமானத்துக்கு வரி செலுத்துவார்கள்! அவன், வருமானத்தையே 'வரியாக'ச் செலுத்தினான்!! ரூபாய் இருபத்தைந்து. ஏழைகளின் கதியே அப்படித்தானே, இருக்கிறது?

இருபத்தைந்து ரூபாய்! பணம், 'கஜானா'வுக்குப் போய்விட்டது.

முதலை, இலட்சுமணபுரி, மிருகக் காட்சி சாலைக்கு அனுப்பப்பட்டு விட்டது—இனி, அதற்கு வேளா வேளைகளுக்கு உணவு கிடைக்கும் — கொஞ்சம ஓடியாடாமலிருந்தாலும் சிகிச்சைகள் கிடைக்கும் — கண் போல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவே சர்க்காரின் அதிகாரியும இருக்கிறார்.

முகமது இஷாக்குக்கு...? இனி, யார் கதி! வீதியும் பசாரமும் தான்!!

முதலைக்குக் கூட, பாக்கியம் கிடைக்கிறது,

அதைவிடக் கேடுகெட்டவனாகி விட்டான, ஏழை!

கொடுமையான பிராணி முதலை, அதைப் பிடித்து, வாயைக் கட்டி

விற்பனையாளர்களுக்கு

செவ்வாக்கிழமைக்குள் தெரிவிப்போருக்கு மட்டுமே அதிகமான பிரதிகள் அனுப்ப இயலும்.

பொறுப்பாளர்
'திராவிட நாடு'

வேடிக்கை காட்டியதற்கு, வழக்கு, அபராதம்.

ஆனால், மனிதர்களை அடிக்கிறார்கள்—சுடுகிறார்கள் — ரத்தம் வழிந்தோடுகிறது வீதிகளில் சீறும் புலிகளைப்போலப் பாய்ந்து பாய்ந்து தாக்குகிறார்கள் சர்க்காரின் அம்புகள்.

அடிக்கடி நடக்கிறது, நாட்டில்—ஆறறிவுள்ளவனும் மனிதன்! உயிர் ராசிகளிலேயே உயர்ந்தவனும்!—ஆனால், அவனை ஆள்வோர் படுத்தும்பாடு, அப்பப்ப, சொல்லுந்தரமன்று.

அதிலும் காங்கிரசாட்சி முகிழ்த்த நாள் முதல், எதிர்க்கட்சிகள் என்பவை, அடையும் அவதிகள் ஆயிரமாயிரம்.

அமைதியோடு அர்த்தால் நடத்தினும் ஒருநாள் — அதை யடக்கக் காங்கிரசாட்சி வீசிய வேதனைகள் பலப் பல.

தம்மம்பட்டி

கல்லக்குறிச்சி

திகைக்கச் செய்கிறது சேதி! சுட்டார்கள் — எழுவருக்குக் காயம் — மருத்துவ மனைகளில் உயிர் துடித்துக்கொண்டு கிடக்கிறார்கள்.

சென்னை, வேலூர், மதுரைபோன்ற இடங்களில், தடியடியும் நடந்திருக்கிறது. எலும்பு பிலடிபட்டோர், மண்டை உடைந்தோர், எழுந்திருக்க இயலாத நிலையில் கிடப்போர் என்போரின் தொகை ஏராளம்.

கேவலம் மிருகத்துக்குக்கூட 'ஜீவ ரட்சக சபை' இருக்கிறது! அப்படிக் குற்றம் செய்தவர்களை இழுத்துக் கொண்டுபோய் தண்டனை வாங்கித் தரவும் முடிகிறது!

ஆனால், மனிதர்களுக்கு......? கேட்க யாரிருக்கிறார்கள்; அடிக்க உத்தரவு கொடுத்தவர்களே எஜமானர்களாக உலவுகிறார்கள்!

முதலைக்குக் கிடைக்கும் பாக்கியம்கூட, மனிதனுக்குக் கிடைக்கவில்லை. அதுவும், எப்படிப்பட்ட மனிதன்? நாடு வாழ, மக்கள் மத்தியில் சுகம் முகிழ்க்க பாடுபடும் உத்தமக் கொள்கைகொண்ட மனிதனுக்கு.

கொடூர ஜந்துக்கு யோகம் அடிக்கிறது; நல்ல மனிதன், கொடுமைப் படுத்தப்படுகிறான்.

விசித்திரமாகத்தானிருக்கிறது, இந்த ஆட்சியை நினைத்தால்!

★

"கடைந்த மோரையே......!"

"அழகுக்கு அழகூட்ட வாரீர்! அருமையான ஆடைகளைப் பாரீர்!"

"ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் நாட்டு அழகிகள் அணிந்தது இது. எவ்வளவு அருமையாக இருக்கிறது பார்த்தீர்களா? அது போல, வேண்டுமா உங்களுக்கு. விலாசம் தருகிறோம். எழுதுங்கள்."

"புதிய 'டிசைன்'கள் வேண்டுமா? இதோ, நிறுத்தியிருக்கும் இந்தப் பொம்மையைப் பாருங்கள். இப்படித்தான், நாகரீகப் பெண்கள், எங்கள் நாட்டுப் பட்டினை அணிகிறார்கள். இதுபோல, நீங்களும் அணியலாம்! ஆகவே, வருக, வருக—எம்மிடம் பெறுக."

*

அமெரிக்காவின் தலைநகரமாம் நியுயார்க்கில் நடைபெறுகிறது, ஒரு கண்காட்சி.

கண்ணைக் கவரும் பொம்மைகள்! அவை மீது கவர்ச்சிகரமான பட்டுடைகள்!! வருவோரின் கருத்தை இழுக்கிறதாம்.

தொட்டுப்பாரும் எமது பட்டினை! அப்போது அறிவீர், அதன் அருமை பெருமையினை!—என்று அறிவித்த வண்ணம், எடுத்து எடுத்துக் காட்டுகிறார்களாம், தமது நாட்டில் தயாரான ஆடைப் பொருள்களை.

கண்காட்சியைக் காண, அமெரிக்கா முழுவதிலுமிருந்து வருகிறார்களாம். நியுயார்க் நகர மக்கள் எல்லாம் அங்கு போய்க் குழுமுகிறார்களாம்.

மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார் கண்காட்சியை நிர்வகிப்பவர் — "வெற்றி! பெருமிதமான வெற்றி!" என்பதாக.

"அமெரிக்கர்களுக்கு எங்களது நாட்டில் நெய்யப்படும் பட்டினைக் கொண்டுவந்து காட்டி, அதற்கு 'மார்க்கெட்' தேடும் முயற்சிக்காகவே வந்தோம். நல்ல வெற்றி! வெள்ளம் போல் மக்கள் கூட்டம் வந்து குவிகிறார்கள்" என்று தெரிவிக்கிறார், கசிஜோயாகி எனும் பெயர்கொண்ட அந்த நிர்வாகி.

ஜப்பான், சின்னஞ்சிறு நாடு. ஆனால் அங்கே உற்பத்தியாகும் பட்டுத்தொழிலுக்கு 'மார்க்கெட்' பிடிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இப்படியொரு கண்காட்சியை ஏற்பாடு செய்தனர், நியூ யார்க்கில்.

ஜப்பானிலுள்ள முக்கியமான பட்டுத் தயாரிப்பாளர்களிடம் தயாராகும் ஆடை வகை எல்லாம் கொண்டுபோய் நியுயார்க்கில் கண்காட்சி நடத்துகிறார்கள். ஒவ்வொரு ஆடையிலும் அதனை நெய்தவர்களின் பெயர், அந்த ஆடை எங்கு கிடைக்கும் என்கிற விபரம், அதனுடைய விலைமுதலிய குறிப்புகளை யெல்லாம் எழுதிவைத்துள்ளார்கள். வருவோர் போவோர், கவனத்தைக் கவருகிற அளவுக்கு ஏற்பாடுகளும் பிரமாதமாக இருக்கின்றன! ஆடை விற்பனையும் நடைபெறுகிறது—அதனால், வெள்ளம்போல் மக்கள் திரளுகின்றனராம்—எமது காரியம் வெற்றி என்கிறார் ஜப்பானியத் தோழரான யாகி!

பட்டுத் துணிக்கு, அமெரிக்காவில் 'மார்க்கெட்' பிடிக்கும் வேலை துரிதமாகச் செய்யப்படுகிறது, ஜப்பானால்.

இதே ஜப்பான், பட்டுத்தொழிலை மட்டுமல்ல கைத்தறித் துணிகளைத் தயாரிப்பதிலும், வெளி நாடுகளில் கொண்டுபோய் குவிப்பதிலும் சாதுர்யமான முறைகளைக் கையாண்டு வருகிறது.

இங்கும்தான், கைத்தறி வாழ, ஆதரவு வாரம் நடத்துகிறார்கள், ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் செலவழித்து! மக்களின் பேராதரவைப் பெற, இந்த ஆண்டும், இப்போது, ஆங்காங்கு விழாக்கள் நடைபெறுகின்றன!

அமைச்சர்கள் அழைக்கப்படுகிறார்கள்—அதிகாரிகள் தலைமை தாங்க வருகிறார்கள் — நீதிபதிகள் கலந்து கொள்ளுகிறார்கள் — நேத்திரானந்த மூட்ட ஆடலுண்டு பாட்டுண்டு-குமரி

களின் நாட்டியமுண்டு–நாடகங்களும் நடிக்கப்படுகின்றன — விளக்கொளி கண் கூசுகிறது!

எல்லாம், எங்கே? எந்த மக்கள் வந்து கலந்துகொள்ள வேண்டுமோ, அவர்கள் வரமுடியாத இடத்திலே! ஊர்க்கோடியிலோ அல்லது ஏதாவது ஒரு மண்டபத்திலோ, இந்த விழாக்களும் கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இவைகளைக் கண்டு உணர்ச்சியும் உவகையும் அடைய வேண்டிய தறியாளரும் அங்கு வர முடிவதில்லை! அதைப்போல பொது மக்களும் வருவதில்லை!

இப்படி, இங்கே, கைத்தறி விழா கொண்டாடுகிறார்கள். இதற்கென்று சர்க்கார் ஒதுக்கிய 'செஸ்' தொகையிலிருந்து ஏராளமான பணமும் செலவழிகிறது!

"உள் நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுள்ள இந்த அனுதாப உணர்ச்சி, நிரந்தர பரிகாரம் ஆகிவிட முடியாது. தறியாளரின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்றால், கைத்தறி ஆடைகளுக்கு வெளி நாடுகளில் மார்க்கெட் பிடிக்க வேண்டும்," என்றும், கூறப்படுகிறது—அந்த விழாக்களில் கலந்து கொள்வோரால்.

அமெரிக்கா போன்ற இடங்களில் நமது நாட்டில் நெய்யப்படும் பட்டாடைகளின் மீது மிகவும் மோகமிருப்பதாக, விஜயலட்சுமி பண்டிதையாரே ஒரு முறை தெரிவித்தார். அங்கு சென்று வருவோரும், இதை வலியுறுத்தத் தவறுவதில்லை.

ஆனால், பட்டாடைகளை நெய்து வைத்துக்கொண்டு அவதிப்படுகின்றனர் நமது வியாபாரிகள்! அவர்தம் குறைகளை ஒழுங்காகக் கவனித்து நிவர்த்திக்க, வழிவகைகள் செய்யும் சாதாரண முயற்சிகூட அரும்பவில்லை இங்கே.

சேலம் வேட்டி, சின்னாளப்பட்டி சேலை, மதுரைச் சின்னடி, காஞ்சிபுரம் லுங்கி இப்படிப்பட்ட பொருள்களை வெளி நாடுகளுக்குக் கொண்டுபோய், அவைகளுக்கு 'மார்க்கெட' பிடிக்கலாம்.

பட்டுத் தறிகளுக்கும், இடம் பிடிக்க வாய்ப்பு இருக்கிறது ஏராளமாக.

அதைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்துகின்றார்கள், ஜப்பானிய நாட்டவர்.

பழைய பெருமையினை உணர்த்தியும், புதிய நாகரீகத் தயாரிப்புகளைக் காட்டியும், கண் கவரும் காட்சிகளை ஏற்பாடு செய்தும் அமெரிக்காவின் ஆதரவைத் தேடுகிறார்கள்.

ஜப்பானியரைவிட, பழம் பெருமையைகாட்ட வேண்டுமெனின் பஞ்சமா நமக்கு! புதிய நாகரீக பாணிகளில் உடை நெய்வோர் கொஞ்சமாகவா இருக்கிறார்கள்? தமிழகத்துத் தையலார் அணியும் புடவைகளைக் கண்டு அமெரிக்க மாதும், ருஷ்ய விருந்தாளிகளுமன்றோ ஆர்வம் கொள்ளுகின்றனர்!

ஆர்வமூட்டித் தொழிலுக்கு வெளியிடங்களில் ஆதரவு தேட வேண்டுவது அத்தியாவசியமாகும்.

"ஏன் நாங்கள்மட்டும் செய்யாமலா இருக்கிறோம்? கொழும்பு, சிங்கப்பூர், ரங்கூன், ஏடன் முதலிய நான்கு இடங்களிலும் கடைகளைத் திறந்திருக்கிறோம், தெரியுமா?" எனக் கேட்கக் கூடும், கைத்தறியாளர் போர்டினர்.

அவர்களறியாததல்ல! கொழும்பும் சிங்கப்பூரும், ரங்கூனும், இந்தியாவைப்போலவே விடுதலைபெற்ற நாடுகள். அவையாவையும் தத்தமது நாட்டுத் துணி உற்பத்தித் தொழிலை ஆதரிப்பதில்தான் கவனம் செலுத்துகின்றன. ஆகவே, கிழக்கு ஆசிய நாடுகளில், எதிர்காலக் கைத்தறிக்கு ஆதரவு கிட்டுவது என்பது எளிதல்ல.

ஆதலால் பணக்கார நாடுகளான அமெரிக்கா, உதவும் நிலையிலிருக்கக் கூடிய ரஷ்யா, சீனு முதலிய நாடுகளில் நமது துணிப்பொருள்களை விற்க ஏது உண்டா என்று ஆராய வேண்டும்.

ரஷ்யாவிலும் சீனுவிலும் இதற்கு வாய்ப்புகள் உண்டென்கிறார்கள! ஆகவே, அங்குள்ள மக்களிடையில், நமது தயாரிப்புகளின் மீது ஆர்வம் உண்டாகும் வழிகளைக் காணவேண்டும். அதைவிடுத்து, இங்கேயே வெளிச்சம் போடுவதும், ஏதோ இதையும் ஒரு சர்க்கார் காரியமாகக் கருதி நடத்துவதும், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

★

என்ன மமதையோ!

எதிர்க்கட்சிக்காரர்கள் எது செய்தாலும் அதைக் குறைகூறுவதென்பதே காங்கிரஸ் குணாளர்களின் கடமையாகிவிட்டது. இந்தக் கைங்கரியத்தைத் திறமையாகச் செய்ய பிரச்சார பீரங்கி, அவர்கள் வசம் இருக்கும்போது என்ன கவலை? அதனுல்தான் மலையை மடுவாக்கலாம்! மடுவை மலையாக்கலாம் என்று கருதுகிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் ஏனோதானோக்களுக்கிருப்பதில் வியப்பில்லை; ஆனால் அகிலமும் அறிந்த — ஜனநாயகமே எனது இலட்சியம் என்று அடிக்கடி கூறும் நேரு பண்டிதருக்கும் இருக்கிறதென்றறியும் போது விந்தையாகவே உள்ளது.

அமிருதசரஸ் மாநாட்டிற்கு அருகில் தாராசிங்கின் அகாலிதளத்தினர் நடத்திய மாபெரும் ஊர்வலத்தைக் கண்டதும் அவருக்கு உள்ளெரிச்சல் பொறுக்க முடியவில்லைபோலும்! அதட்டிக் கூற துணிச்சலும் எழாததால், கிண்டல் செய்திருக்கிறார், 'இது ஒரு தமாஷா' என்பதாக. பஞ்சாப் மாநிலம் வேண்டும் என்று சீச்கிய மக்கள் சிம்மக்குரல் எழுப்புவது, தமாஷாவாக இருக்கிறது, நேரு பண்டிதருக்கு! "மக்களின் எண்ணத்துக்கு பிரதமர் தரும் மதிப்பு இந்த அழகில் இருக்கிறது. இதுதானு, ஜனநாயகம்? இதுவே, ஒரு காங்கிரஸ் தமாஷாவாக இருந்தால், உலகத்திலேயே மிகப்பெரிது என்று சொல்லுவார்கள், காங்கிரசார் செய்யவில்லையல்லவா, அதனுல் உடனே அதைக்கேலிசெய்யக்கிளம்பிவிட்டார்" என்று இதை டில்லி சபையில், எடுத்துரைத்து இடித்திருக்கிறார் பேராசிரியர் முகர்ஜி. அவர் கூறுகிறார்,

"நாட்டில் வாழும் ஒவ்வொருவரும், கலவரங்கள் நடப்பதையும்," அத்துமீறிய செயல்கள் முளைப்பதையும் கண்டிக்கும்போது நமது பிரதமர் மட்டும் சொல்லுகிறார், வீதிகளில் நடக்கும் காரியங்களுக்கு வீதிகளிலேயே பதிலளிக்கப்படும் என்று. ஒரு பிரதமர் சொல்லுகிறார், இப்படி! தன்னுடைய மக்களைப் பார்த்து, இப்படி சவால் விட்ட ஜனநாயகப் பிரதமரை, எந்த நாட்டிலும் நான் கண்டதில்லை!

எங்கும் கண்டதில்லை, என்கிறார் முகர்ஜி! வீதிகளில் மக்கள் கிளர்ச்சி செய்தால், அவர்களை வீதிகளிலேயே வீழ்த்துவேன்—என்பதுதான் நேரு பண்டிதரின் பேச்சின் பொருளாகும். வீதிகளிலேயே வீழ்த்துவாராம்! மக்கள் தலைவர், மதோன்மத்தக் குரலில் பேசுகிறார்!!

நேரு பண்டிதர், தினசரி, ஜனநாயக முறையைப் பற்றிப் பேசுபவர். அவர் இப்படிப் பேசுகிறார், மமதையுடன்! அதை அதட்டிக் கேட்டு ஜனநாயக ஒழுங்கை வலியுறுத்தும் முகர்ஜி, ஒரு கம்யூனிஸ்டு!!

ஜனநாயகத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை கிடையாது எனக் கூறும் குழாமைச் சேர்ந்தவர், நேரு. அந்த நேரு, ஹிட்லர் பாணியில் பேசுகிறார்! அவரால் கண்டிக்கப்படும் முகர்ஜி ஜனநாயகத்தின் அருமையை விளக்குகிறார்!!

நேருவின் வீழ்ச்சி, இவ்வளவு சிறு சம்பவங்களிலுமா ஏற்பட வேண்டும், உலகம் பார்த்துச் சிரிக்க வேண்டும் என்று எண்ணுகிறபோது வருத்தமே வருகிறது.

அதிகாரக்குரல்! — இல்லையெனின், மக்களை இழுப்பாரா, சவாலுக்கு,

★

கவிதை அரங்கம்

"அப்படியா அப்பெல்லஸ்!" என்று, வேந்தன்
அடிசாய்ந்த மரமாகக் கீழே சாய்ந்து
'தொப்'பென்று வீழ்ந்திட்டா னில்லை; தோழன்
தோள்மீது வாள்தூக்கும் கையை யிட்டு

அப்படியே அணைத்தருகில் அழைத்துச் சொல்வான்:
"அழுக்காறே இல்லாத அருமைத் தோழா!
சேலொக்கும் விழியாளை; சிறுத்த வஞ்சிச்
சினையொக்கும் இடையாளை; சிரிக்கும் முல்லை

போலொக்கும் முத்தாளை; பழுத்த கொய்யாப்
பழமொக்கும் இதழாளை; புளிக்காதிராட்சைப்
பாலொக்கும் மொழியாளை; பாரே அஞ்சும்
படைமிக்க அலெக்ஸாண்டர் ஆவி ஒக்கும்

கோலக்கிள் ளையெந்தன் கம்பாஸ் பிமேல்
சீலக்கா தல்கொண்டு கேட்டோய்; கேட்பாய்!
வில்லேந்தி, வாளேந்திப் பகைவர் எந்தன்
தாளேந்தச் செய்திட்டேன்; தழைத்த பச்சைப்

புல்லேந்த ஒளியேந்தும் பனிக்கண்ணீரும்
இறுமாந்து ஏமாறும் வெய்யோன் வந்தால்!
எல்லாந்தான் இருக்கின்ற தென்று இங்கு
எதிர்ப்பில்லா திருந்திட்டேன்; ஆனல் புல்லில்

மல்லாந்து துயில்கொள்ளும் துளிபோ லானேன்;
மாசில்லா அப்பெல்லஸ்! மலரை நோக்கி
முன்வந்த வண்டுக்குப் புதுத் தேனுண்டு!
பின்வந்தா லெச்சில்தான் மிச்சம்' ஆனல்

அன்பெந்த வண்டின்மேல் பூவுக் கென்று
அருமந்த அப்பெல்லஸ்! அறிந்தேன்; சொந்தம்
என்பந்தம் பாசத்தை உந்தன் சொந்த
உயிர் தந்த கம்பாஸ்பி யுடனே தந்தேன்!

பண்பிந்த மாவீரன் தனிச்சொத் திஃதை
பழிவந்து தீய்க்காது காப்பேன் வர்ணக்
கலவைச்சேற் றுல்கண்ணைக் கருத்தை உண்ணும்
காடுமலை, காட்டாற்றை, கவிஞன் உள்ளம்

நிலவைப்பா டும்பாட்டை, நீரில் மூழ்கி
நீந்தும்நே ரிழையாரை, தென்றற் காற்று
உலவும்பூஞ் சோலையிலே ஆடும் மஞ்ஞை
உயர்கிளையில் பொன்னூசல் ஆடும் கிள்ளை

உலராத உயர்கொள்கை வீரர் தம்மை
உயர் வான உன்கோலால் தீட்டித் தீட்டித்
தருவோனே! தட்டாதென் சொல்லை ஏற்பாய்!
தரித்திரமே அறியாதார்; தரணி மீதில்

பெரும் பொய்யர், மதவாதக் குருக்கள், பூசை
புனஸ்காரப் புரோகிதனும் 'பாவி'யென்று
ஒருசேரத் தூற்றிடுவர் உன்னை; மத்த
ஒளிசேரும் கம்பாஸ்பி 'வேசி' என்று

தெருவெல்லாம் பேசிடுவர்! தடையோசாவின்
உருக்கொண்டு வந்தாலும் கலங்கா தேநீ!
கம்பாஸ்பி உன் சொத்து! அவளுன் ஆவி!
கைவாளின் மீதாணை! நீயும் நம்பு!

நம் நாட்டுப் பானத்தில் நலங்கள் தோயும்
நன்னுடாம் திருவிடத்து முத்தை யிட்டு
எம்முள்ளம் களிப்பாறப் பருக லாம்வா!
இடறில்லை; நானுற்ற துணையாய் நிற்பேன்!

செம் பவள இதழாளைச் சுவைத்து மெத்த
சுகமெய்தி வாழ்வாயென் வாழ்த்தை ஏற்பாய்!"

என். பி. நடராசன், நல்லட்டிபாளையம்.

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான் மன்னன்
அலெக்சாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சியோடு
அப்படியா அப்பெல்லஸ் என்று வேந்தன்
அரற்றினன் அவன்கழுத்தை நெரிக்கப் போனன்
'தப்'பென்று மனம்சொல்ல வெகுளி நீங்கித்
தார்வேந்தன் சிந்தனையில் மூழ்கி நின்றன்
"அப்பெல்லஸ்! என்தவறு நீயென் செய்வாய்
அவளுனக்கே!" என்றன்பின் மயங்கி வீழ்ந்தான்.

சோ. இளங்கண்ணன்,
காரைக்குடி.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில், உண்ர்ச்சியோடு!
அப்படியா அப்பெல்லஸ்! என்று வேந்தன்............
அவன்துணிவை மிகமெச்சி அவளின் உள்ளம்
செப்பு கின்ற ஒப்புதலும் கண்டறிந்துச்
சித்திரத்தை மட்டுந் தான் கொண்டுமீண்டான்!
ஒப்பற்ற அழகுருவம் என்றும் பெற்றன்
உள்ளமில்லை அன்(று) இன்றே உயிர்தான் இல்லை!

தமிழவேள்,
வேலூர்.

★

அப்பெல்லஸ் இவ்வாறு உரைத்தான்; மன்னன்
அலெக்ஸாண்டர் தன்னிடத்தில் உணர்ச்சி யோடு
'அப்படியா அப்பெல்லஸ்' என்று வேந்தன்
அறைந்தான் உணர்வெல்லாம் ஒன்று கூட்டி
"இப்பாதை எப்போதும் செல்லல் வேண்டாம்
எந்நாளும் ஆபத்து அறிதி" என்றன்
"எப்பாபத் தையும் நான் செய்யவில்லை
என் ஆசைக் கம்பாஸ்பி எனக்குவேண்டும்"

என்றன்தன் முகத்தினிலே ஆசைவீச
ஏறிட்டான் அலெக்ஸாண்டர் கோபத்தோடு
தின்றன்தன் கனல்வீசும் கண்களாலே
திகைத்திட்டான் அப்பெல்லஸ் செய்வதின்றி
நின்றன்கற் சிலையைப்போல் அவனின் முன்பு
நிலைபெற்ற அவளுருவைத் தீட்டிவிட்டு
"கொன்றலும் தீராத கொடுமைசெய்தாய்
கொன்றல்தான் தீருமிக் கொடுமை" என்றன்

சிந்தனையில் அலெக்ஸாண்டர் திரிந்தபோது
சிரித்திட்டாள் கம்பாஸ்பி வேகமாக
"எந்தனையே அப்பெல்லஸ் கேட்டுவிட்டான்
ஏனவனை நானடையக் கூடா"தென்றள்
"உந்தனை நான் கொன்றுவிடின் யாதுசெய்வாய்?"
உலகாண்ட அலெக்ஸாண்டர் கேட்டுவிட்டு
"இந்தாஅப் பெல்லஸ்நீ கேட்ட ஆவி
எடுத்துஉன் சிரத்தில் வைத்துக்கொள்வாய்"

எடுத்தான்தன் கத்தியினை இடையினின்று
ஏந்திழையாள் அருகினிலே சென்று கையை
கொடுத்தானக் காரிகையின் இடையினூடே
கொன்றன்தன் வெறியினையே அடக்க எண்ணி
கடுத்தானப் பெல்லஸ்தன் நண்பன் மீது
கடுஞ்சினத்திலே குழைந்து கதறலானுள்
"அடுத்தாற்போல் அணங்கவதி இல்லை நண்பா
அழுதிடுவோம்; வருகின்றேன" என்றன் வேந்தன்.

ரா. பா. சு. மணி,
நரிக்கல்பட்டி.

★ அலெக்ஸாண்டர் கவிதைக்கு தோழர்கள் வழங்கும் முடிவுகள்.

மலர் 14] 26-2-56 [இதழ் 34

புதிய 'பாணி'

—

பிப்-20 சர்வகட்சிக் கூட்டணி நடத்திக் காட்டிய வெற்றிகரமான அர்த்தால் வீண்போகவில்லை.

'சர்வதேசப் பிரச்சினைகளின் முன்பு இந்தச் 'சலசலப்பு'பற்றி எல்லாம் அவர் கவனிக்கமுடியுமா' — என்று இங்குள்ள 'தொண்டரடிப் பொடியாழ்வார்கள்' பேசுகின்றனர்; ஆனால் பார்லிமெண்டில், குடியரசுத் தலைவரின் பேருரைமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் பண்டித நேரு சென்னை அர்த்தால் பற்றிக் குறிப்பிடடிருக்கிறார்.

வழக்கமாக வாரி வீசுவாரே—'பைத்தியக்காரத்தனம்; காட்டுமிராண்டித்தனம்' என்ற சுடுசொற்கள் — அதுபோல் அல்ல!

முற்றிலும் புதிய பாணியில் பேசி இருக்கிறார்!

"இராஜ்ய சீரமைப்பு விடயத்தில் தகராறு ஏற்பட்டுள்ள இடங்களில், வாக்கெடுப்பு நடத்துவது சாத்தியம்தான்" என்று நேரு தெரிவிக்கிறார்.

பார்லிமெண்டில், பண்டித நேரு இவ்விதம், 'வாககெடுப்பு' சாத்தியம்—என்று தேவிகுளம்-பீர்மேடு போன்ற எல்லைப் பகுதிகள் குறித்துத்தான் கூறுகிறார்.

இந்த அளவில், சர்வகட்சிக் கூட்டணியின் முதல் முயற்சியான அர்த்தால், வெற்றி தருகிறது.

இனி, நேரு பண்டிதர் மாறிவிடாமலும், 'ஜாடை' பேசுவதுடன் நின்றுவிடாமலும் 'வாக்கெடுப்பு' திட்டம் தந்து, எல்லைத் தகராறு தீர்க்கப்படுவதற்கான வழிகாண்பாரானால், எல்லைத் தொல்லை தீர்க்கப்பட்டுவிடும்.

இதனை, வலியுறுத்தி, 'வாக்கெடுப்பு'க்கு ஏற்பாடு செய்ய, சென்னை சர்க்கார் இனியாவது முன்வரலாம்.

★

6-பக்கத் தொடர்ச்சி

படி ஒரு துரைத்தனமா? இதற்குத் தூபதீப நைவேத்தியம் வைத்தல்லவா தேர்தலில் ஓட்டுக் காணிக்கை தந்தோம். மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளியுங்கள் மகத்தான நன்மைகள் செய்து தருகிறோம் என்று ஆசை வார்த்தை கூறினர்; சாரை சாரையாகச் சென்று ஓட்டு அளித்தோம — இப்போது தடியடியும் துப்பாக்கிக் குண்டுமல்லவா தருகிறார்கள். என் மகனைத் துப்பாக்கியினால் சுட்டிருக்கிறார்களே! அவதார புருஷன் என்றும் அஹிம்சா மூர்த்தி என்றும், ஒப்பற்ற முனிவன் என்றும் போற்றப்பட்ட உலக உத்தமராம் மகாத்மாவின் சீடர்கள், வாரிசுகள், என்று கூறிக்கொண்டே, இவ்வளவு கொடுமைகளைச் செய்கிறார்களே. ஏனென்று கேட்க யாரும் இல்லை, பெற்ற வயிறு பற்றி எரிகிறதே; இந்த அநீதியை அக்ரமத்தை, ஏனென்று கேட்க நீதிமான் யாரும் இல்லையா! காட்டில் உள்ள புலி நாட்டுக்குள் நுழைந்து விட்டால், வீட்டுக்கோர் வீரன் கிளம்பிச் சென்று வேட்டையாடி, கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்கி, புலியைக் கொன்றுபோடுகிறார்களே, நாட்டைக் காடு என்று எண்ணிக்கொண்டு, மக்களை அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளாக்கும் ஓர் ஆட்சி நடக்கிறது, அறிஞர் பெருமக்களும் ஆண்மையாளர்களும், குடி அரசுக் கோட்பாட்டின் பாதுகாவலர்களும் வாய் மூடி இருந்திடலாமா? என்றெல்லாம் அவர்களுக்குப் பேசத் தெரியாது, ஆனால் கண்ணீருக்கு வேறென்ன பொருள்!

தம்பி, தம்மம்பட்டி சம்பவம், கேட்கும்போதே நெஞ்சு உருகுவதாக இருக்கிறது.

தம்மம்பட்டி, ஆத்தூர் வட்டாரத்தில் உள்ள சிற்றூர்.

மாபெரும் புரட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடத்தினாலும், மொத்தமாக ஒரு ஆயிரம் மக்கள் திரண்டிட முடியாது.

அங்குள்ள மக்களுக்கு, நமது இயக்கத்தைப்பற்றி அறிவிக்க, தம்மப்பட்டியில் நமது கழகக் கூட்டம்கூட நடைபெற்றதில்லை.

சுற்றுப்புறமுள்ள இடங்களிலே நடைபெற்ற நமது கழகக் கூட்டங்களின் மூலமாகப் பெற்ற உணர்ச்சிதான், தம்மம்பட்டிக்கு இருந்து வந்தது. ஆனால், பிப். 20 அர்த்தால் பற்றிய சர்வகட்சிக் கூட்டணியின் பிரசாரம் தம்மம்பட்டிக்கும் பரவிற்று—தமிழர் வீறுகொண்டெழுந்தனர்—ஊர்வலம நடந்தது. தம்மம்பட்டி சென்றுவந்த தம்பி மதியழகன், அறுபது எழுபது பேருக்கு மேல் ஊர்வலத்தில் செல்லவில்லை என்று தெரிந்துவந்து அறிவிக்கிறார். இதை 'புரட்சிப் படை' போலீசைத் தாக்கவந்த படை, நாசம் விளைவிக்கக்கூடிய படை என்றெல்லாம் கருதிக்கொண்டு, அதன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார் ஒரு சப்-இன்ஸ்பெக்டர். மூவர், தம்பி! குண்டடிபட்டு, மருத்துவ மனையில் இருக்கிறார்கள்.

மகாத்மா, மொழிவழி ராஜ்யமே தேவை என்று வலியுறுத்தி வந்தார். மக்களுக்கு, வாககளித்தார். அவர் 'வாரிசு' ஆகவந்து அரசோச்சும் நேருபண்டிதரோ, மகாத்மாவின் மொழிவழி ராஜ்பத் திட்டத்தைக் கிழித்தெறிகிறார்.

மகாத்மாவின் உபதேசத்தைப் புறக்கணித்து நடக்கும் நேரு பண்டிதருக்குப் பக்கபலமாக இருப்பதில் பெருமைகொள்ளும் காமராஜ் சர்க்காரோ, தம்மம்பட்டி கல்லக்குறிச்சி நடத்தி மகிழ்கிறது.

தருக்கரிடம் ஆட்சி சிக்கிக் கொண்டதால், குண்டடிக் கொடுமைக்கு ஆளான தம்மம்பட்டித் தோழர்களே! நீங்கள் அனுபவித்த கொடுமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிறோம்—முதலில்—பிறகோ தாயகத்தின் உரிமை முழக்கமிட்டு, அதனை ஒடுக்க எண்ணுவோரின் குண்டினைத் தாங்கிக்கொண்ட, நெஞ்சு உரம்கொண்ட தோழர்காள்! உமது வீரத்துக்கு தலைவணங்குகிறோம் என்று நான் மட்டுமா, சர்வகட்சிக் கூட்டணித் தலைவர்களெல்லாம், ஏன், தமிழகமே கூறுகிறது.

கல்லக்குறிச்சியிலும் தடியடி—குண்டடி; அங்கும மூவர் படுக்கையில்.

கேட்கும்போது, கண்ணீர் வருகிறது—பிறகோ, மார்பு நம்மையுமறியாமல் நிமிர்கிறது, தமிழகமே! தாயகமே! உன் மக்களில் வீரரும் தீரரும் இல்லாமற் போகவில்லை—அனைவருமே பக்தவத்சலங்களாகி விடவில்லை—இதோ தம்மம்பட்டியும் கல்லக்குறிச்சியும் உனக்கு இரத்த காணிக்கை தந்திருக்கின்றன, தருக்கராட்சிக்குக் குருதி மேலும் தேவை என்றாலும், தரச்சித்தமாக உள்ள வீரர் அணிவகுப்பு, உன் தளைகளை ஒடித்திடும் வல்லமையை மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாகப் பெற்றுக்கொண்டு வருகிறது என்று எண்ணி எக்காளமிடத் தோன்றுகிறது.

கடை அடைப்பும் பொதுவேலை நிறுத்தமும் தான் நடத்தினோம்—அதிலும், வற்புறுத்தல் துன்புறுத்தல், வம்பு வல்லடி செய்தல், குறுக்கே படுத்தல், மறித்து நிறுத்துதல், கூடாது என்று கூறிவிட்டோம்—கொழுந்துவிட்டெரியும் ஆர்வத் தீயைத் தணியச் செய்து கொள்ள முடியாததால், இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில நடைபெற்றுவிட்டன — சிந்தைநொந்து தமது வருத்தத்தைத் தெரிவிக்கிறார் கூட்டணித் தலைவர்.

சென்னையில், ஊர்வலத்துக்கு வந்த மக்களை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த அன்பர் ஜீவாவும், கம்யூனிஸ்டுக் தலைவர் வெங்கடராமனும் போலீசால் தாக்குண்டனர். ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளவர், இது கேட்டு இன்னமும் வெட்கித் தலைகுனியக் காணோம், இத்தகைய அக்ரமத்தில் இறங்கியவர்களைக் கண்டித்ததாகவும் தெரியவில்லை. கட்சியின் நடு நாயகங்களாக விளங்கும் இருவர், நாற்பதாண்டுகளாக பொதுப்பணியாற்றிவரும் மக்கள் தலைவர்கள், தாக்கப்படுகின்றனர், பட்டப்பகலில் நடுவீதியில் அமைதியைக் காத்திட அவர்கள் ஈடுபடுகிற நேரத்தில்.

அமைதி பிறந்தனா நம்மாம் நிச்சயம். தங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தலைவர்களை கண்ணெதிரே போலீஸ் அடிக்கக் கண்டால், மக்கள் மனம் என்ன பாடுபடும் — கொதித்தெழுவரன்றோ மக்கள். ஆமாம், அதைத்தான் விரும்புகிறார்கள் அடக்கு முறையில் பயிற்சி பெற்றோர். மக்களைக் கொதித்தெழச் செய்வது, கொதித்தெழுந்த மக்கள் மீது தம்மம்பட்டி கல்லக்குறிச்சி நடத்துவது! இது தான் முறை என்றால், இதற்கு ஜனநாயகம் என்ற போர்வை ஏன?

தோழர் கோவிந்தசாமி M.L.A. கடலூரில் கைதானார்—குற்றம் என்ன தெரியுமா தம்பி, கொள்ளை அடித்தார் என்பது. நம்ம கோவிந்தசாமியேதான், எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் காங்கிரசுக்குத் 'தத்து' போனபோது, தொத்திக்கொண்டிருந்தால், சீமானாகி இருக்கக்கூடும் — அந்த வாய்ப்பு வேண்டாம், வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும், மக்களுக்குத் துரோகம் செய்யக்கூடாது, பதவி அல்ல முக்கியம், பண்புதான் என்று உணர்ந்து உழைப்பாளர் கட்சியை உருவின்றி போகச் செய்ததைக் கண்டித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தோழமைகொண்டு பொதுப்பணியாற்றி வருகிறாரே, புன்னகை மாறாத முகமும், புன்மொழி பேசிடா வாயும, எவரிடமும் இன்மொழியே பேசிப் பழக்கமும் பெற்றுள்ள பண்பாளர் இருக்கிறாரே, அவர், "என்னை மீறி நடக்கிறானே. பார், பார், ஒழிததுக் கட்டிவிட்டு

மறுவேலை பார்க்கிறேன்" என்று மந்திரி மிரட்டியபோதும் மனம் தளராமல், மக்கள் தொண்டனாகி, மகத்தான பணியாற்றிக்கொண்டு வரும் அதே கோவிந்தசாமிதான், தம்பி, கொள்ளைக்காரனாகப்படுகிறது, ஆட்சியாளர்களின் கண்களுக்கு. வழக்கு இருக்கிறது, எனவே மேலால் அது குறித்துக் கூறுவதற்கில்லை.

தமிழகத்தில் ஒட்டு மொத்தம் ஆயிரம் தோழர்களைப் போலீசார் இழுத்துச் சென்றனர்—இப்போது நூறு தோழர்கள்மீது வழக்கு தொடரப்படக்கூடும் என்று தெரிகிறது.

தோழர்கள் A. கோவிந்தசாமி, M.L.A. நாமக்கல் இராமசாமி M.L.A. திருச்செங்கோடு அர்த்தநாரி M.L.A. சென்னை ப. ஜீவானந்தம் M.L.A. சென்னை V. முனுசாமி, கார்ப்பரேஷன் கவுன்சிலர், வேலூரில் நகரசபை உறுப்பினர்கள் மூவர்—ஆகியவர்கள் போலீசாரால் கைதுசெய்யப்பட்டனர் — இதிலே தோழர் A. கோவிந்தசாமி அவர்கள்மீது மட்டும் வழக்குத் தொடரப்படுகிறது.

வழக்கம்போல், தீவிரக் கிளர்ச்சியில் முன்னணியில்நின்று பெருமை பெற்றிருக்கிறார் நமது அலமேலு அப்பாத்துரையார்—தமிழரசுக் கழகத் தோழியர் சரோஜனி நாராயணசாமி அவர்களுக்கும் இதே பேறு கிடைத்திருக்கிறது.

மொத்தத்திலே, நாமெல்லாம் நீண்ட நாட்களுக்குப் பிறகுங்கூட எண்ணிப்பார்த்துப் பார்த்துப் பெருமைப்படத்தக்க விதமாகவே நிகழ்ச்சிகள் இருந்திருக்கின்றன. எவ்வளவு கடுமையான கிளர்ச்சியானாலும், எவ்வளவு நீண்ட காலத்துக்குத் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்றாலும், தமிழகத்தில் அதற்கான வாய்ப்பும் திறனும் நிரம்ப இருக்கிறது என்பதும், வேண்டுமென்றே ஆத்திரமூட்டிவிடப்பட்ட சிற்சில இடங்களில் தவிர, பொதுவாக மற்றெல்லா இடங்களிலும் பண்பறிந்து மக்கள் நடந்துகொண்டனர் என்பதும் மகிழ்ச்சியூட்டுகிறது — அவ்வகையில் நடத்திச்செல்லும் திறமையைப் பெற்றதாகச் சர்வகட்சிக் கூட்டணி அமைந்திருக்கிறது என்பது, நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. இவ்வளவுக்கும், சர்வகட்சிக் கூட்டணியைப் பிளவுபடுத்த, பலத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. நமது பொதுச்செயலாளரும் துணைப் பொதுச்செயலாளரும் தமிழகமெங்கணும் கூட்டணித் திட்டத்துக்கு நமது கழகத் தோழர்களிடம் ஆதரவு திரட்டச்சென்றிருந்தனர். தோழர் மதியழகன் கோவை, சேலம், வடாற்காடு மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து வந்தார். தம்பி சம்பத்து முழக்கம் கேட்டவண்ணமிருந்தது-நான்தான் இங்கே சென்னையில் தனி ஆளாக விடப்பட்டிருந்தேன்! எனக்கு எப்போதுமே இத்தகைய கிளர்ச்சிகளின்போது உடனிருந்து உற்சாகமூட்டவும், என் கோபதாபத்தில் பங்கேற்றுக்கொள்ளவும், சம்பத்து வேண்டும். இம்முறையோ நாட்கள் அதிகம் இல்லாததால், நானே, சம்பத்து, பலஊர்களுக்குச் சென்றுவர வேண்டும் என்று விரும்பினேன். இதனால், இங்கு தம்பி! என் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளவோ கலந்து பேசிப் புதிய கருத்துப் பெறவோ மெத்தத் திண்டாடிப் போனேன். நாள் தவறாமல் கூட்டம்—பலபல ஆயிரம் மக்கள்—பேரார்வம்; பேரார்வம் என்று கூடச் சொல்லலாம் — எனினும் அலுத்துவந்தமர்ந்து, கண் அயரும் வேளை வரையில், அன்றைய நிலைமைபற்றி உரையாட, அவர் வருவாரா, இவர் வருவாரா என்று எதிர்பார்த்தவண்ணமிருப்பேன், எவரும் வருவதில்லை, 'வேலைவெட்டி' யற்ற அனைவரும் இருக்கிறார்கள், இந்தத் தொல்லைபிடித்த காரியம் பற்றி என்னுடைய 'தொணதொண'ப்பைக் கேட்டுக்கொண்டிருக்க—எனினும், துணைக்கு நாங்கள் இருக்கிறோம், நாங்கள் கழக முன்னணியில் இல்லாமற்போனது எங்கள் குற்றமல்ல என்று கூறுமாற்போல் கூறிக்கொண்டு, என்னுடன் கலந்துரையாடவும், கருத்துகளைத் திரட்டித் தரவும் தோழர்கள் போளூர் சுப்பிரமணியமும், சென்னை வேதாசலமும் இருந்தனர். என்னைப் போன்ற மற்றோர் 'மாஜி' இல்லையா, சென்னை கே. எம். கண்ணபிரான் அவரும் இருந்தார்—அறிவகத்தில் உள்ள கழகத் தோழர் சிவஞானம்—இவர்கள் இருந்தனர்.

இந்தக் கட்டத்திலே தான், சர்வகட்சிக் கூட்டணியின் தலைவர்களுடன், அடிக்கடி சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டபடி இருந்தது, அதனால் எனக்கு உற்சாகம் ஏற்பட்டதுடன், எங்களுக்குள் ஓர் உள்ளன்பு வளர்ந்திருக்கிறது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு ம. பொ. சி. யுடன் மீண்டும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது — இருவருமே இதனை மெத்தச் சுவைத்தோம் என்று எண்ணுகிறேன்.

தமிழரசுக் கழகத் தோழர்களில் எனக்கு, நீண்டகாலமாகவே நண்பர், உமாபதி. கூட்டணி காரணமாக நாங்கள் சந்திப்பதும், பொதுவாகத் திட்டம் தீட்டுவதும், காணக்காண அவருக்கு மெத்த மகிழ்ச்சி—அலாதியான ஆனந்தம்!

கோவை சின்னத்துரையும், சென்னை சுப்ரமணியமும், ஈரோடு சின்னசாமியும், சென்னை அந்தோனிப்பிள்ளையும், அவரவர் தொடர்பு கொண்டுள்ள தொழிற் சங்கங்களின் மூலம் சர்வகட்சிக் கூட்டணி பெறக்கூடிய வாய்ப்புகள் பற்றிக் கூறியும், பிரச்சினைகளை அன்புடன் விவாதித்தும், திட்டங்கள் காணுவதிலே தெளிவும் துணிவும் காட்டியும், எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டினர்.

ஜீவாவைப் பற்றித்தான் சொல்லத் தேவையில்லை!

"பொல்லாத ஆசாமி, சொல்லாமல் கொள்ளாமல் வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டார்", என்று நாமெல்லாம், எப்போதும் சொந்தம் கொண்டாடிப் பேசும் நிலையில் உள்ள தோழர்.

இவ்வளவு பேருக்கும் அன்பை அள்ளிக்கொடுத்து, முற்றிலும் தமக்குப் பழக்கமே இல்லாத முறைகளையும் திட்டங்களையும் நாங்கள் திணிக்க முயற்சித்தபோதெல்லாம், புன்முறுவல் காட்டி, எங்கட்கெல்

அடிக்கிறது யோகம்!

ஆமாம் சமஸ்கிருதத்துக்குத்தான் யோகம் அடிக்கிறது. மகாபாரதப்போர் நடைபெற்றதாகக் கூறப்படும் குருக்ஷேத்திரத்தில், கல்லூரி கட்டப்போகிறார்களாம். 1956-லிருந்து, அந்த சமஸ்கிருதக் கல்லூரி இயங்குமாம். சர்க்காரே முன்னின்று காரியங்களைச் செய்கிறது! மாபெரும் கட்டிடங்கள் கட்டவும் திட்டங்கள் தீட்டப்பட்டுவிட்டதாம்!!

சர்வகட்சி கூட்டணி ஆபீஸ்

லாம் பொறுப்புப் பற்றி அடிக்கடி நினைவுபடுத்தி, எம்மை ஊக்குவித்து வந்தார், உடனிருந்து நடத்திச் சென்றார், பி. டி. ராஜன் அவர்கள்.

சர்வகட்சிக் கூட்டணிக்கு, சட்டத்தைக் காப்பாற்றியாகவேண்டும் என்ற பொறுப்பைத் தாங்கித் தாங்கித் தழும்பேறிப்போனவர் தலைவர்; அதிலே உறுப்பினர்களாக உள்ளவர்களில் பெரும்பாலோர், ஜனநாயகத்தின்பேரால் பதவிக்கு வந்தவர்கள சட்டத்தைப் பயன்படுத்தியே சர்வாதிகாரியாகிவிடுகிறார்கள என்ற உண்மையை அறிவதால் ஆத்திரமே கொள்பவர்கள்! இந்தக் 'கூட்டு' எத்தனை நாளைக்கு நிலைக்கும்? ஒரு சிறு விவாதத்தில் சச்சரவு மூண்டு விடாதா? திட்டம் தீட்டும்போதே தகராறு கிளம்பிவிடாதா? கொள்கை விளக்கமளிக்கும்போதே ஒவ்வொருவர் ஒவ்வொரு கோணம் சென்றுவிடமாட்டார்களா? என்றெல்லாம் எண்ணிக்கொண்டுதான் காமராஜர்கூட, கூடட்டும் கூடட்டும். தீட்டட்டும், தீட்டட்டும் என்று கூறிக்கொண்டு சும்மா இருந்துவிட்டார் என்று எண்ணுகிறேன். அப்படியே அவருக்குச்சிறிதளவு ஆயாசமோ அச்சமோ ஏற்படவிடக் கூடாது என்பதற்காகவே, பெரியாரும், பூ, பூ! இதுகளெல்லாம் கூடி ஒரு காரியம் செய்யமுடியுமா? யார் இதுகளை நம்புவார்கள்? இதுகள் யார் என்பது யாருக்குத் தெரியாது? என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தார்.

எனினும், தமிழகம் கண்டு பாராட்டத்தக்கவிதமாக, கூட்டணி செயலில் ஈடுபடுவதிலே, தோழமை உணர்ச்சியையே காட்டிற்று. ஒவ்வொரு சந்திப்பும், நேசத்தை வளர்த்தது. ஒவ்வொரு விவாதமும், தோழமைக்கு அழைத்துச் சென்றது.

கூட்டணி முறியவில்லை என்பதையும், பெரியாரின் பகைப் பிரசாரத்துக்குப் பிறகும், கூட்டணியின் குரலுக்கு நாட்டு மக்கள் ஆதரவு அளிக்கிறார்கள் என்பதைத் தெரிந்த பிறகுந்தான், ஜனவரி 27ல் அமைக்கப்பட்ட கூட்டணியை அலட்சியப்படுத்தி, தலைவருடன் பேச முயற்சிக்காமல் முடுக்குடன் இருந்து வந்த காமராஜர் சர்க்கார், கூட்டணித் தலைவரைக் கண்டு பேசவும், அர்த்தாலைக் கைவிட்டு விடும்படி அவரைக் கேட்டுக் கொள்ளவும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டம் பிறந்தது! ஆனால், அதற்குள் கூட்டணி அலுவலகக் கதவு தாளிடப்பட்டுவிட்டது; தட்டினால் திறக்கப்படும்; கேட்டால் விளக்கம் அளிக்கப்படும், கெஞ்சினாலும் மிஞ்சினாலும் அர்த்தாலைக் கைவிடுவது என்பது மட்டும் முடியாது என்பது அறிவிக்கப்பட்டாகி விட்டது.

அரசியலில் அமளிகளைத் தடுத்துச் சமரசம் காண்பதற்கென்றே தம்மை ஒப்படைத்திருப்போர் மூலம், 'சமரசம்' பேசப்பட்டது—பலன் ஏதும் இல்லை, காரணம், கூட்டணி தன் திட்டத்தில் தடுமாற்றமற்ற நிலையில் இருந்தது தான்.

19ந் தேதி காலை, தம்பி! இரவெல்லாம் எனக்குத் தூக்கம் இல்லை—ஏதேதோ விதமான வதந்திகள், நானும் விதவிதமான புத்தகங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டேன், உள்ளே போக...... விடியற்காலையில் மதுரையிலிருந்து தலைவர் சென்னை வருகிறார். வருகிறவரிடம் கெஞ்சுவது போலவும் கொஞ்சுவது போலவும் ஓர் அறிக்கையும், வழிக்கு வராவிட்டால் தாக்குவோம் என்று மிரட்டும் விதமாக மற்றோர் அறிக்கையும் சர்க்கார் வெளியிட்டு விட்டார்கள். பி. டி. ராஜன் வருவார், இந்த அறிக்கைகளைக் காரணமாகக் காட்டுவார். கடை அடைப்பு வேண்டாமென்று கூறிவிடுவார், கூட்டணி உடைபடப்போகிறது, என்றெண்ணிக் குதூகலம் கொள்கிறார்கள், மாற்றார். என் செய்வேன்? நானும், காலையிலேயே எழுந்தேன், தலைவரைக் காணச் சென்றேன். தம்பி! அந்தக் காட்சியை நான் என்றைக்கும் மறந்திட முடியாது. பி. டி. ராஜன் அவர்கள் முகத்தில் 'சோப்பு' போட்டுக்கொண்டிருக்கிறார், உள் அறையில்; நான் வெளி அறையில் நுழைகிறேன், எப்படியாவது காமராஜரின் அறிக்கையில் திருப்தி பெறச் செய்யவேண்டும் என்று எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்த நண்பரும் இருக்கிறார்—நான் சிறிதளவு பயந்து போனேன். இருவரிடமும் எனக்குச் சாதகமாக இருந்தாக வேண்டும் என்று சண்டைபோடக் கூடிய அளவு உரிமை உண்டு—எனினும்—அதே போல அவர்களுக்கும், நாங்கள் சொல்லுகிறபடி கேட்டுத்தானாக வேண்டும் என்று என்னிடம் கூற உரிமை உண்டல்லவா, அதனால் பயந்துபோனேன். என மனநிலையைப் புரிந்துகொண்டாரோ என்னவோ, பி. டி. ராஜன் என்னைப் பார்த்ததும், "அண்ணாந்துரை! என்ன விஷயமெல்லாம் எப்படி இருக்கிறது? எது எப்படி இருப்பினும், 20ந் தேதிய காரியத்தில் நான் உங்களோடு இருப்பது உறுதி. விட்டுவிட்டுப் போய்விடுவேன் என்றுமட்டும் எண்ணிக் கொள்ளாதே!" என்றார். வெற்றிப் புன்னகையுடன் நான், சமரசத் தூதுவரைப் பார்த்தேன். அவர் மட்டும் என்ன செய்வார்? அவருக்கே உரித்தானதோர், பரிவான பார்வை காட்டினார், தம்பி! உன்னை மனக்கண்ணால் கண்டேன், உறுதி கொண்டேன.

அன்பன்,

அண்ணாத்துரை.

திருமணம்

காஞ்சிபுரம் திருவேங்கடம்—கிருஷ்ணவேணி வாழ்க்கை ஒப்பந்தம் 17-2-56 தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

எப்பொழுதும் கூட்டம் திரண்டிருக்கும், பூக்கடைமுனை.
அகிலபாரத சர்க்கார் சங்கமும், திறக்கப்படவில்லை.



என்றாவது கண்டதுண்டோ, பாய்க்கடை (ராட்டன் பஜார்) பக்கத்தை!
தமிழர்தம் எழுச்சிக் குரலுக்கு, எல்லா வியாபாரிகளும் செவி சாய்த்தனர், சென்னையில்.

Regd. No. M. 4642
போன் நெ. 15

★

பிராட்வே முனை—
சட்டக் கல்லூரிக்கு
எதிரே.

'மாடர்ன் கபே'
அன்று
முழுதும்
மூடப்பட்டிருந்தது.

★



★

அதற்கு
அருகிலுள்ள
'ராமகிருஷ்ண
லஞ்சு ஹோம்'
எனும்
பெரிய ஓட்டலும்,
ஒய். எம். சி. ஏ.
கட்டிடமும்.

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.